புராணிகர், காளத்தி

திரு. இ. சிதம்பரசாமி பாண்டியர்

அவர்கள்

# அன்பளிப்பு

[illegible]-20.

திருவாய்மலர்ந்தருளிய

சாஸ்திரக்கோவையுளொன்றாகிய

# மகாராஜா துறவு

## வசனம்.

இது

லோகோபகாரி பத்திராசிரியர்

கோ. வடிவேலு செட்டியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை செட்டியாரவர்களாலும்,

மங்கலம் - ஷண்முக முதலியாராலும்

சென்னை, கோமளேசுவரன் பேட்டை

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரைட்] 1917. [விலை அணா மூன்று

# மகாராஜா துறவு.

---

## கணபதிமுதலிய ஐவர் வணக்கம்.

"அமரர்கள் பரவுந் திருமுது குன்றி லாழத்துப் பிள்ளையைச் சிகரிக், குமரசற் குருவை யிமகிரி ராஜ குமாரியாம் பெரியநா யகியை, முமலமு மொருங்கே யகற்றிடு முக்கண் முதல்வனைச் சாந்தநா யகனை, நம தெனைப் படியே முடிந்திடத் தினமு நாடியின் றிறைஞ்சி வாழ்த்திடுவாம்" (1)

## முக்குரு வணக்கம்.

"மறைமுடி வதனில் விளங்கிடு மொளியே மனித ரைப் போலவந் தெனது, சிறைதவிர்த் தாண்ட சிவப் பிர காச தேசிகன் றன்னைமற் றவன்றன், நறைமல ரடி யைப் போற்றிடுஞ் சாந்த நாயகன் றன்னைமற் றவன்றன், திறையருள் பெற்ற பழனிமா முனியை நெஞ்சினு ளிருத்தியே பணிவாம்" (2)

## ஆழத்துப்பிள்ளையார் துதி.

"தொய்யின் முலைக்கோ டிரண்டுகவான் றதிக்கை மூன்று விழிதுரிசில், துய்யசைவ முதன்மதமுந் துலங்க வருமொன் பிடியுலகம், உய்ய வுதவு மொருகளிற்றை யுலவா விருத்த சைலத்தில், வையம் பரவு மாழத்து வாழைங் கரனை மனநினைவாம்" (3)

## விருத்தாம்பிகை துதி.

"இருட்கலி வலியின் ஞானநன் னெறிக ளிறந் துயிர் கொடுநெறி மேவி, மருட்கொடு கலங்கா வகைகலி யென்றும் வந்தணு காப்பதி தன்னில், தெருட்சத்தி கருணை யுருவதாய் நின்று தெளிவிக்கு மிறைவியெங் குருவோர், அருட்கடல் பெரிய நாயகி யுலகுக் கனைமு தல் வியைப்பணிந் திடுவாம்." (4)

## சபாநாயகர் துதி.

"திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந் திழை யுமையுளங் களிப்பப், பொங்கரா வொடுநற் புலி முனி வர்கண்மால் போதய னமரர்கள் போற்றத், துங்க நான் மறைக டுதித்திட வைந்து தொழில்விரிந் திடப் பொது வதனிற், செங்கழ லதிர நடஞ்செயும் பொரு ளைத் தினம்பணிந் திடரொழித் திடுவாம்." (5)

## சிவகாமியம்மை துதி.

"அருளுருவா யுயிர்கடமக் கன்னை யாகி யஞ்ஞா னந் தனையகற்றி யமல மாகி, மருளிலதாய் மெய்ஞ்ஞான மாகு முத்தி வாய்த்திடவே காத்தருளி வானோ ரேத்த, இருள்கெடவே யினிருமிருங் கழல்க ளார்ப்ப விறைபுரி யுந் திருநடத்தாற் களித்து வாழுந், தெருண்மருவு மறைநான்கும் பரவுந் தில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந் தை செய்வாம்." (6)

## விநாயகர் துதி.

"சொக்கர் போன்றெளிர் முக்கட் சிலம்பினை
மிக்க பேரருள் வேலையை யோர்கொம்பால்
தக்க வன்பர்க் குதவுந் தருவினை
இக்க கைநிற வேழ மிறைஞ்சுவாம்." (7)

## சுப்பிரமணியர் துதி.

"கடிகமழ் கரிய கூந்தற் கனிமொழித் துவர்வாய்த் தெய்வப், பிடிதனக் கோட்டால் வள்ளிப் பெண்கொடி படருஞ் செய்ய, படிபுகழ் புயமாங் குன்றிற் பாயவண் கழுநீர் நீப, மடலவிழ் செழுந்தார்ச் செவ்வேலவண் மலரடி வணக்கஞ் செய்வாம்." (8)

## அடியார் துதி.

"வண்டுழா யலங்கன் மாயவன் மலர்மேல் வதிந்த நான் முகன்மறை யறியாத், தொண்டைவாய்க் கெண்டை விழிக்குழை மொழியொண் டொடியிடை யுமையை யோரிடத்திற், கொண்டகோ னருளைப் பொருளெனக் கருதிக் குலவிய சாதனந் தரித்து, மண்டிய வடியா ரியாவர்மற் றவர்தாண் மனத்தினுஞ் சிரத்தினும் வைப் பாம்."

லோகோபகாரி ஆபீஸ், சென்னை.

சிவப்பிரகாசப்

# பெருந்திரட்டு

## (குறுந்திரட்டுடன்).

இது சொரூபாநந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

சாஸ்திரரூபமாயுள்ளது.

இதில் 224 அதிகாரங்களிருக்கின்றன முமுட்சுக்களுக்கேயன்றி, மதங்களின் சொரூபங்களையும் அவற்றின் பேதங்களையும் அறிய விருப்பமுடையார்க்கும், உபந்நியாசகர்கட்கும் மேற் நூல் பெருங் கருவியாயுள்ளது. இதில் 2821 செய்யுட்களிருக்கின்றன; பெருந்திரட்டிலில்லாத குறுந்திரட்டின் 424 செய்யுட்களுமிருக்கின்றன. இது டிம்மி 8 - பக்கங்கொண்ட 80 - பாரவளவு புத்தகம். விலை ரூபாய் மூன்று.

---

## தர்க்கபரிபாஷை (விரிவான குறிப்புரையுடன்).

துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகளால் மொழிபெயர்க்கப்பட்ட தர்க்க பரிபாஷை, சட்தரிசனங்களு ளொன்றிய நியாய சாஸ்திரத்தை யநுசரித்துப் பிரமாணமுதல் நிக்கிரகத்தான மீறாகச் சோடச (பதினாறு) பதார்த்தங்களைச் சங்கிரகமாக நிரூபிப்பதா யிருப்பது. இது தர்க்காப்பியாசஞ் செய்யும் யாவர்க்கும் பிரமாணமுதலியவற்றின் ஞானம் எளிதி லுண்டாகுமாறு அவசியமாக வேண்டுமிடங்களில் விரிவாகக் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. விலை ரூபாய் ஒன்று

## லோகோபகாரி ஆபீஸ், சென்னை.

### விவேக சூடாமணி.

பாக்கெட்சைஸ்-விலை அணா 8.

இது ஸ்ரீசங்கராபூஜ்ய பகவத்பாதாசாரியசுவாமிகளவர்களால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இந்நூல் தமிழ்மக்கட்குப் பெரிதுமபயன்படுமாறு திருவிடைமருதூர்ப் பிட்சு சாஸ்திரிகளென்னும் உலகநாத சுவாமிகளவர்களால் 671 பாடலாக மொழிபெயர்த்தருளப்பட்டது. இதில் 164 அரிய பெரிய விஷயங்களடங்கியிருக்கின்றன. இது முமுட்சுக்களொவ்வொருவராலும் பொன்னேபோல் போற்றப்படுவது; ஆத்மாநாத்ம விவேகமடைதற்குப் பரம சாதனமாயுள்ளது.

### திருவாசகம்.

இது பிழையறப் பரிசோதித்து

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

பாக்கெட் சைஸ் $5\frac{1}{2}$X$3\frac{1}{2}$ அங்குலம் அளவு.

காலிக்கோ பைண்ட்-விலை அணா 10.

### மெய்ஞ்ஞானபோதம்.

இது 1911 வது வருடத்து லோகோபகாரியின் முதற்பக்கத்திற் பிரசுரமான வேதாந்த விஷயங்கள் அடங்கிய புத்தகம். இதில் 52 வேதாந்த உபந்நியாசங்களிருக்கின்றன; உபசாந்தத்திற்கேதுவான ஆத்மாநாத்ம விவேகத்தை யுண்டாக்குவதற்குப் பரமசாதனமா யுள்ளது. விலை அணா 12.

## லோகோபகாரி ஆபீஸ், சென்னை.

### சர்வதரிசன சங்கிரகம்.

இது ஸ்ரீசங்கரபீடத் தாசிரியரா யெழுந்தருளி யிருந்த ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளா லருளிச்செய்யப்பட்டது. இதில் அடியில் குறிப்பிட்ட 16-மத சித்தாந்தங்களடங்கி யிருக்கின்றன. (தமிழ் மொழிபெயர்ப்பு) விலை ரூபாய் 2—8—0.

1. சார்வாக தரிசனம்
2. பௌத்த தரிசனம்
3. ஆருகத தரிசனம்
4. இராமானுஜ தரிசனம்
5. பூரணப்பிரஞ்ச தரிசனம்
6. நகுலீசபாசுபத தரிசனம்
7. சைவ தரிசனம்
8. பிரத்தியபிஞ்ஞா தரிசனம்
9. இரசேசுவர தரிசனம்
10. வைசேஷிக தரிசனம்
11. நியாய தரிசனம்
12. ஜைமினி தரிசனம்
13. பாணினி தரிசனம்
14. சாங்கிய தரிசனம்
15. பதஞ்சலி தரிசனம்
16. சாங்கர தரிசனம்.

### ரிபுகீதைத்திரட்டு (குறிப்புரையுடன்).

மகா இதிகாசங்களு ளொன்றாகிய சிவரகசியத்தின் ஆறாவது அம்சத்திலுள்ள ரிபுகீதை திருவிடைமருதூர்ப் பிட்சு சாத்திரிகளென்று வழங்கும் உலகநாத சுவாமிகளவர்களால் 1924 பாடலாகத் தமிழில் மொழிபெயர்த்தருளப்பட்டது. அதை விஷயப்பொருத்தம் விடாது 874 பாடலாகத் திரட்டப்பட்டு அவசியமான விடங்களிற் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. இது சாத்திரத்திற்கு மிகுதியும் உபயோகமாயுள்ளது. ரூபாய் ஒன்று.

ஓம்

பரப்பிரஹ்மணே நமஃ.

# மகாராஜா துறவு - வசனம்.

[மகாராஜா துறவினைக் கூறியவரும், கேட்டவரும்].

நைமிசாரண்யத்தில் தவஞ்செய்து வாழுகின்ற முனிவர்கள் தமது ஆசிரமத்திற் கெழுந்தருளிய சூத முனிவரை வணங்கித் துதித்து, தேவரீர் எங்களுக்கு மகரிஷிகள், தேவர்கள், அரசர்கள் முதலாயினோரது கதைகளைப் பற்பலவாக வகுத்துக் கூறினீர்; அங்ஙனமாயினு மிதுகாறும் மகாராஜாவின் துறவினைக் கூறினீரில்லை; ஆதலால், அதனைச்சொல்லியருளல்வேண்டுமென்று கூறினார்கள். சூதமுனிவர் அம்முனிவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, சுருதிப்பிரசித்தமான அதனைச் சங்கிரகமாக அவர்களுக்குக் கூறுவாரானார்.

[கருநாட தேசத்தரசனது சிறப்பு].

நீர்வளம், நிலவளம் முதலியவற்றால் சிறந்து விளங்கும் கருநாட தேசத்திற் கரசனாகிய ஒருவன் அத்தேசத்தின் பிரதான நகரமாகிய மாபுரத்தில் தனது குடி

களைத் தனதுயிரெனப் பாவித்து, திக்கெட்டிலுமுள்ள அரசர்கள் வந்து வணங்க, அடைக்கலமென்றடைந்த வரைப் பாதுகாத்து, பகைமன்னரை யடக்கி, வாழ்ந் திருந்தனன். இந்திரனிலும் மேம்பட்ட செல்வமுடைய வனும், மன்மதனிலும் சிறந்தவழகுடையவனும், மலையி னுந் திண்ணிய தோளுடையவனும், போர்க்களத்தில் பகை வரை வெல்லுவதில் ஆண்சிங்கம் போன்றவனுமுள்ள அப் பெருவேந்தனது தலைவாயிலே வேற்றரசர்கள் வந்தடை ந்து தமது திறைகளைக் கட்டுவதும், முரசு வாத்தியங் கள் முழங்க மணவினைகள் நடைபெறுவதும், எப்போ தும் அம்மாபுர மென்னும் நகரத்தின்கண் ஓய்வதில்லை யாம். கடல்போலச் சேனையும், மலைபோலமார்பும், யாளி போலப் பலமும், வேற்றரசர் வந்து வணங்கும் பாத மும், சக்கராயுதத்தைத்தரித்த கையும், பகைவரது வலி மையைக் கெடுக்கும் வாளும், கற்பகவிருக்ஷம்-சங்கநிதி- பதுமநிதிகள் போலப்பொருளை எற்பார்க்கு இல்லை யென் னாதீயும் ஈகையுமுடைய அப்பெருநிலவேந்தன் அழகிய மங்கையர்கள் சாமரங்களையும் ஆலவட்டங்களையும் வீச வும், அரம்பையைப்பொத்த மகளிர் † பாகடை கொடுக்க வும், நடநமாதர் இன்னிசைக் கருவிகளுடன் நடநந்

---

† பாகடை — பாக்கு வெற்றிலை.

செய்யவும், தனது அரசாட்சியின் கீழ்வாழும் அரசர்கள் வந்து சூழ்ந்து துதிக்கவும், சேனாவீரர்கள் போலைச் சூழவும், இந்திரனது சுதர்மையென்னும் சபாமண்டபம் போல விளங்கும் சபாமண்டபத்தில் சிங்காதனத்தின் மீது எழுந்தருளியிருந்து, உலகத்தை மனுதர்ம சாஸ்திரம் கூறிய முறைப்படி பாதுகாத்து. அனேக போகங்களை அனுபவித்து வாழ்ந்து வந்தனன்.

[அவ்வரசன் தனக்குப் புத்திரப்பேறின்மைபற்றி வருத்தமுற்றுத் தீர்த்த யாத்திரை முதலிய புண்ணிய கருமங்களைச் செய்து ஒரு சற்புத்திரனைப் பெறுதல்].

அவ்வேந்தன் ஆதிசேஷன் சுமக்கும் பூமியை நமக்குப் பின்பு ஆளுதற்குப் பிள்ளைகள் நம் வயிற்றிற் பிறக்கவில்லையே யென்று வருத்தமடைந்து, கங்கை முதலிய புண்ணிய நதிகளில் ஸ்நானஞ்செய்தும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரனென்னும் மும்மூர்த்திகளையும் பூசை செய்தும், துறவிகளுக்கு உண்டி, மருந்து, உறையுள் முதலியவற்றைக் கொடுத்தும், புத்திரகாமேஷ்டி முதலிய யாகங்களைச் செய்தும், பூமியை வலமாகச் சுற்றி வந்தும், சிவாலயம் விஷ்ணுவாலய முதலிய ஆலயங்களையும், சாலைகளையும், அக்கிராரங்களையும், நந்தன வனங்களை

யும், தடாகங்களையும், கிணறுகளையும், குளங்களையும் அளவிறந்தனவாக அமைத்தும், † சோடச தானங்களை

† சோடச தானம்: —

சையா தானம், சத்திர தானம், கஜ தானம், அஸ்வ தானம், கன்யா தானம், உபாயன தானம், காலபுருஷ தானம், சயன தானம், கிருக தானம், புஸ்தக தானம், பாத்திர தானம், சாளக்கிராம தானம், பாதுகா தானம், அன்ன தானம், வித்யா தானம், கிருஷ்ணாஜின தானம் என்பனவாம்.

மற்றொருவகைச் சோடசதானம்:—

கோ தானம், கஜ தானம், ஹய தானம், சாகை தானம், மகிஷி தானம், ரத தானம், கிருக தானம், சையா தானம், பூ தானம், வித்தியா தானம், கன்னியா தானம், தாசி தானம், சுவர்ண தானம், ரத்தின தானம், திலதானம், அக்கிரகார தானம் என்பனவாம்.

சோடச மகாதானம்: —

துலாபுருஷ தானம், இரணியகர்ப்ப தானம், பிரஹ்மதண்ட தானம், சுவர்ண தானம், பஞ்சலாங்கல தானம், சுவர்ணதேனு தானம், பூகோள தானம், கனகபர்வத தானம், காமதேனு தானம், கற்பகவிருட்ச தானம், ரஜதபர்வத தானம், சகஸ்ர தேனு தானம், சாலங்கிருதிஹேம விருஷப தானம், சாலங்கிருதி லட்சுமி பிரதிமா தானம், சாலங்கிருதி சப்தாசல தானம், சப்த சமுத்திர தானம் என்பனவாம்.

யும் ‡ தசதானங்களையும் முப்புத்திரண்டு அறங்களையும் முறையாகச் செய்தும், பல வேறு திறத்தனவாகிய தவங்களைப் புரிந்தும் ஒரு சற்புத்திரனைப் பெற்றனன்.

[அப்புத்திரனுக்கு அவ்வரசன் ஜாதகன்ம முதலியவற்றையும் வித்தியாப்பியாச முதலியவற்றையும் செய்தல்].

அவ்வரசன் அப்புத்திரனைப் பெற்ற பின்னர் யான் இனிப் பிறப்பை யொழித்தேன்; எனக்குப் பரமபதமும் கிடைக்குமென்று மகிழ்வுற்று, அப்புத்திரனுக்கு ஜாதகர்ம முதலிய கருமங்களை யெல்லாம் விசேஷமாகச் செய்து மகாராஜனென்று நாமகரணஞ் செய்தான்: **வித்தியாப்பியாசஞ்** செய்தற்குரிய வயது வந்தபின் வேத விதிப்படி நல்லாசிரியர் வாயிலாக வித்தியாப்பியாசஞ் செய்வித்தான்; அப்புத்திரன் அறுபத்து நான்கு கலைகளையும் அவரிடத்து ஓதியுணர்ந்தபின், அவர்க்கு அவர் வேண்டும் வேண்டும் என்றவைந்து கூறுமாறு

---

‡ **தசதானம்:—**

**கோதானம், பூதானம், திலதானம், இரணியதானம், ஆச்சிய தானம், வஸ்திரதானம், தானியதானம், குளதானம், ரௌப்பியதானம், லவணதானம் என்பனதாம்.**

பொருளைத் தட்சிணையாகக் கொடுத்தான்; அப்பால், தேர், குதிரை, யானை, † சிவிகைகளின்மீதேறுதலில் அப்புத்திரனைப் பழகச் செய்து, பின் அப்புத்திரனுக்குத் திருமணஞ் செய்யவெண்ணினான்.

[மகாராஜனுக்குத் திருமணஞ் செய்தல்].

அக்கருநாட தேசத்தரசன் தனது பெறலரும் புத்திரனாகிய மகாராஜனுக்கு நிகழுந் திருமணத்திற்கு நீவிர் வரல் வேண்டுமென்று ஐம்பத்தாறு தேசத்தரசர்க்குந் திருமுகமனுப்பினான்; அவர்கள் அத்திருமுகத்தைக் கண்டு, தமது சேனைகள் தம்மைச் சூழ்ந்துவர மாபுரமென்னும் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தனர். அப்போது அம்மாபுரத்தின்கண் வாழ்வார் சுவர்களை வெண்சுண்ணச் சாந்தால் மெழுகி, மேகமண்டலமளாவச் சித்திரப்பூம்பட்டாடைக் கொடிகளை வரிசையாக வீதிகளில் நாட்டி, சந்தனக் குழம்பாலும் குங்குமக் குழம்பாலும் வீதிகளையெல்லா மெழுகிச் ‡ சிந்தூரப் பொடியால் கோலமிட்டு, பூவையும் பொரியையுங் கலந்து மிகுதியாக இறைத்து, கொடிகளுடைய மதில்களையும், மாளிகைகளையும், கோபுரங்களையும்

---

† சிவிகை - பல்லக்கு.

‡ சிந்தூரப்பொடி - சிகப்புப்பொடி.

புதுக்கிச் செப்பஞ் செய்து, வாழை மரத்தையும் கமுகமரத்தையும் கட்டி மண்டபத்தைச் சிங்காரித்து. தோரணங்களை எங்கும் கட்டி, பொற்குடங்களை வைக்கவேண்டிய இடங்களில் வைத்து. தீபங்களை மனோஹரம்படியாக எவ்விடங்களிலும் ஏற்றி. தேன் துளிக்கும் மலர்மாலைகளை எங்குந் தொங்கவிட்டு. இந்திர நகரம்போல அந்த மாபுரத்தை அலங்கரித்தார்கள்.

அப்போது அரசர் பாரியை, ஸாமுத்திரிகா சாஸ்திரங் கூறும் நல்லிலக்கணங்கள் நன்கமையப் பெற்று, முல்லை மலர்மாலையின் மணம் வீச. ஸ்வர்க்க மத்திய பாதாளமென்னு மூன்றுலகங்களிலுமுள்ள அழகிற் சிறந்த மங்கையரின் அழகிலிருந்து பிரமன் வேண்டியமட்டும் பாகஞ் செய்தெடுத்து உயிரோடு கூடிய ஒரு சித்திரவுருவத்தை யெழுதினதொன்று உலகத்தில் அழகினியல் பமைந்தார் கூற, செந்தாமரை மலரில் வசிக்கும் இலக்குமியும் விரும்பத்தக்க அழகோடு பிறந்து, ஆலின் தளிர்போல மேனியும், கோங்கின் அரும்புபோலக் கொங்கைகளும், செவ்வாம்பல் மலர்போல வாயும், குமிழின் மலர்போல மூக்கும், கருங்குவளை மலர்போலக் கண்களும், செந்தாமரை மலர்போல முகமும், திரண்ட மேகம்போலக் கூந்தலும், மின்னல் போல அசைவும், பூங்கொடிபோல வடிவு

முடைய ஒரு மாதரசினை வேதவிதிப்படி கருநாடதேசத் தரசன் தனது புத்திரனாகிய மகாராஜனுக்குத் திருமணஞ் செய்வித்தனன்.

[மகாராஜனுக்கு மணிமுடி சூட்டல்].

பின்னர்க் கருநாடதேசத்தரசன் தனது புத்திரனாகிய மகாராஜனுக்கு வசிஷ்டர் முதலிய முனிபுங்கவர்களையும் மறைமுழுதுமுணர்ந்த அந்தணர்களையுங் கொண்டு கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களால் ஸ்நானஞ் செய்வித்து, பின் அன்ன நவரத்தின மிழைத்த சிங்காதனத்தின் மீது வீற்றிருக்கச் செய்து, மணிமுடி சூட்டி, "மைந்தனே! இனி நீ இவ்வுலகத்தையாளக் கடவாய்" என்று கூறி, அவனிடத்துத் தனது அரசுரிமையை யொப்புவித்தனன்; ஒப்புவித்தபின் கவலையில்லாது வாழ்ந்திருந்தான்.

[மகாராஜன் உலகாண்டு வாழ்தல்].

தனது தந்தையின் மணிமுடி பூண்டு கருநாடதேசத்தை யாளவந்த மகாராஜன் உலகத்தைப்பொதுமையினின்றும் நீக்கித் தனக்குரிய தாக்கித் தனது † செங்கோல் எவ்விடத்தும் செல்ல எட்டுதிக்கிலுஞ் சென்று,

† செங்கோல்-அதிகாரம்.

அத்திக்குக்கனி முள்ள அரசரை வென்று வெற்றித் திருவை யடைந்து திரும்பித் தனது நாட்டை யடைந்து, தனது மனைவியோடு கூடிச் சுவர்க்கலோக வாசிகளைப் போலப் போகத்தை அனுபவித்து வாழ்ந்து வந்தான் என்று சூதமுனிவர் கூறியருளினார்.

அதைக் கேட்ட நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள் பின்னை அவ்வரசன் யாது செய்தனன்; அதனைத் தேவரீர் கூறியருளல்வேண்டுமென்று வினவ, அதனைச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

[மகாராஜன் தத்துவஞான விசாரம்புரிய முயலுதல்].

மகாராஜன் தனது மனைவியும் தானும் ஒரு நினைவுற்று, ஒரு காலத்திலும் மறவாமல், †தற்றரிசனஞ்செய்துள்ள யோகிகளையும், தக்க நாயர்களையும், கடவுளரையும் நினைந்தொறும் வணங்கி, அவர்கள் கூறிய மார்க்கத்தி லொழுகியும், யோகியர் கூறிய உறுதி மொழிப் பொருள்களைச் சிந்தித்தும், விசேஷமாக ஞான சாஸ்திரங்களை விசாரஞ்செய்யுங் கிரமங்களை அந்த யோகியரிடத்துக் கேட்டுணர்ந்தும் சிலகாலங் கழித்து வந்தான்.

இவ்வாறு மகாராஜனும் அவன் மனைவியும் காலங் கழித்துவரும்போது, ஒருநாள் அவ்விருவரும் ஏகாந்த

† தற்றரிசனம்-ஆத்ம தரிசனம்.

மான விடத்திருந்து, சாஸ்திரார்த்தங்களைத் தங்களிற் றமேயுணர்ந்து ஒருவரையொருவர் கேட்டு, தத்துவ ஞானத்தால் மாயையால் பிறப்பொழிந்து சுகத்தை யடைந்து, எப்போதும் பேரின்பமயமாகவிருக்கவேண்டு மென்று நிச்சயித்து, ஞானிகளையடைந்து, அவர்கட்குப் பாதபூசைசெய்து, அவர்களிடத்தில் தினந்தோறும் தத்துவஞானமெவ்வா றுண்டாகுமென்பதுபற்றிச் செவ் வையாகக் கேட்டு வந்தனர்.

[மகாராஜன் சற்குருவினனுக்கிரக மின்றித் தத்துவஞான முண்டாகாதெனத் துணிதல்].

இவ்வாறெழுகுகின்ற அரசன் அரசியென்னு மிரு வருள் அரசனுக்கு நித்தியாநித்திய வஸ்து விவேகம் மேற்பட்டு விளங்கியது; அதனால் அவ்வரசன் புவனம் போகமென்னும் இருவகைச் சார்பாகிய † புறப்பற் றிரண்டையுமொழித்து, தன்னுடம்பை உண்டி, உடை, மருந்து முதலியவற்றால் பாதுகாப்பதையு மொழித்து, சித்தங்கலங்குவதொழிந்து, தத்துவஞானத்தை யடைந் தால், ‡ அகப்பற்றொழியும்; நிரதிசயவின்பவடிவ மோட் சம் கிடைக்கும்; அம்மோட்சத்திற்குக் காரணமாகிய தத்துவஞானம் சற்குருவின் அநுக்கிரக மில்லாத விட

† புறப்பற்று-புவனபோகங்களை யெனதென் றபிமானித்தலாம்.

‡ அகப்பற்று-தனுகரணங்களை யானென் றபிமானித்தலாம்.

த்து உண்டாகாதென்று தன்னகத்திற் றீர்மானித்தனன்.

## [மகாராஜன் சற்குருவையடைந் துபதேசம் பெற்றொழுகுதல்].

பின்ன ரவ்வரசன் சகத்தின் வாழ்வைச் சதமெனவெண்ணி, அதன்மீது ஆசைகொண்டொழுகி வந்தும் தன்னை ஞானி யென்று மதித்திருக்கின்றவனை ஒருவன் விரும்பி வந்தடைந்து வணங்கி, "தேவரீர் எனக்கு ஞானோபதேசஞ் செய்தருளல் வேண்டும்" என்று தாழ்ந்து கேட்டல் தென்ன மட்டையின் சாற்றைக் குடிப்பவனை ஒருவன் விரும்பி வந்தடைந்து, வணங்கி, "தேவரீர் எனக்குத் † தென்னம் பழத்தின் சுவையைத் தெரிவித் தருளல் வேண்டும்" என்று பலகாற் றிரிந்து கேட்பது போல்வதாம்; வேதாகம சாஸ்திர புராணங்களைச் செவ்வையாகக் கற்றுணர்ந்து, அவற்றின் பொருள்களைத் தன்னை யடைந்து கேட்கும் யாவர்க்கும் காமம் வெகுளிமயக்கமென்னும் முக்குற்றமுமொழியத் தெளிவாகக்கூறி, தான்கூறிய அந்நெறியில் நின்றொழுகுதலில்லாத குருவை அதிகாரி புருஷ

† தென்னம்பழம்-தேங்காய் அல்லது இளநீர்.

னொருவன் வந்தடைந்து வணங்கி, ‡ "நிரதிசயாநந்தம் எவ்வாறிருக்கும்" என்று கேட்டல் குங்குமஞ் சுமக்குங் கழுதையை யொருவன்வந்தடைந்து வணங்கி, "குங்குமத்தினியல்பு எவ்வாறிருக்கும்" என்று கேட்டல் போலவதாமென்றுநிச்சயித்து, பலவிடங்களிலுஞ் சென்று சற்குருவைத்தேடி, பின் ஜீவகாருண்யம், ஈசுவரபத்தி, பாசவைராக்கியம், பிரஹ்மஞானமென்னு மிந்நான்கும் ஒருவடிவமாயுள்ள ஒருவைதிகமுனிவரைஒருபரிசுத்தமான வனத்திற் கண்டடைந்து வணங்கி, "தேவதேவனே! துன்பமானதொருகாலத்திலும் வருவதில்லாத முத்தியை யடைந்துசாவதும் பிறப்பதும்நீங்குவதாகிய ஒருவழியை அடியேனுக் குபதேசித்தருளல் வேண்டும்" என்றுகேட்டனன். அதுகேட்டு அம்முனிவர் இவன் நம் உபதேசத்தைப் பெறுதற்குரியானென்று அம்மகாராஜனது குணங்குறிசெயல்களாலுணர்ந்து, அம்மகாராஜனைநோக்கி, "அரசனே! புவனம் போகமென்னும் இருவகைச் சார்பாகிய புறப்பற்றிரண்டையுமொழித்து, அவற்றின்கண் பழக்கவசத்தாலுண்டாகும் இச்சையினை யழித்து, அவற்றினை ஓரொருபோது நினைத்தலையுங் கெடுத்து, உடம்பைக்

---

‡ நிரதிசயாநந்தம்-பேதமற்ற வின்பம்.

காப்பாற்ற வேண்டுமென்பதையும் நீக்கி, மனத்தினையும் அம்மனத்தின்கணுள்ள (காமக்குரோதாதிக ளுண்டாவதற்குக் காரணமாகிய) வாசனைகளையும் ஆசிரியருபதேசித்தவாறொழுகியடக்கினால் முக்தியுண்டாகும்; அதனால் பிறவியின் காரணமாகிய அஞ்ஞானம் தானாகவேயொழிந்து போம்; ஆதலால் இவ்வுபதேசத்தைச் சித்தத்திற் பொருந்த வைத்துக்கொண்டு விரைவாகச் செல்லக்கடவாய்" என்று கூறியருளினார். பின்னர் அவ்வரசன் அவ்வுபதேசத்தை அம்மாமுனிவரிடத்து ஐயமும் விபரீதமுமொழிய நிச்சயமாகக் கேட்டுணர்ந்து, தனது நாட்டையடைந்து, முன் தான் செய்துவந்த இராஜாங்க முறையினைச் சிறிதுகாலம் செய்துவந்தனன்; அப்பால் ஒருநாள் வனத்தில் மகாமுனிவரிடத்து ஆத்மோபதேசம் பெற்றுக்கொண்டதை நினைத்து, சபாமண்டபத்திலிருந்த மந்திரி முதலாயினோர் யாவரையும் அவ்விடத்தினின்றும் போமாறு விடைகொடுத்தனுப்பிவிட்டு, அந்தப்புரத்திற்குட் சென்று, தனது அரசகோலங்களை நீக்கி, அங்குத் தானொருவனையாகத் தனித்து ஓர் ஏகாந்தமான விடத்தின்க ணிருந்தான்.

[மகாராஜன் தன்னைவந்துகண்ட அரசர்முதலாயினோர்க்கு யான் துறவறத்தை மேற்கொண் டொழுக விரும்பி யிருக்கின்றேன்; நீங்கள் வேறொருவனை அரசனாக நியமித்துக் கொள்வீராக வென்று கூறல்].

அரசர்கள், மந்திரிகள், புரோகிதர்கள் இன்னு முள்ள பெரியோர்கள் யாவரும் மகாராஜன் ஏகாந்தமாக விருக்கும் அவ்விடத்திற்குச் சென்று, அவனை நோக்கி, "அரசரே! நீவிர் ஸ்நானம் சந்தியாவந்தன முதலிய நித்திய கருமங்களைச் செய்யாது சும்மாவிருத்தல் அரசர்க்குரிய இலக்கணமாகாது; நித்திய கருமங்களைச் செய்வீராக" என்று வேண்டிக்கொண்டனர்; அவர்கள் அவ்வாறு வேண்டிக்கொள்ளவே, மகாராஜன் அவர்களை நோக்கி, "யான் அரசர்க்குரிய இலக்கணத்தை விரும்பவில்லை; ஆனால், என்னை யறியவே விரும்பியிருக்கின்றேன்; இதுகாறும் யான் ஆண்ட இராஜ்ஜியத்திலும் போகத்திலும் ஆசையில்லாதவனா யிருக்கின்றேன்; இனி யானவற்றை விரும்பமாட்டேன்; சிறந்ததொரு வனத்திற்சென்று, ஒருவனாக ஏகாந்தமான விடத்தில் தனித்திருந்து, சமாதிசெய்து சித்தவிகாரத்தை யொழித்து வீடடையவிரும்பியிருக்கின்றேன்; வைராக்கியத்தைக்கொண்டஎன்மனம் இனி இவ்விஷய போகத்தில் திரும்

பாது; யான் மகளிர்போக முதலியவற்றை யொருபொருளென வெண்ணி விரும்புவ தொழிக்தேன். ஆதலால், நீங்கள் வேறொருவனை அரசனாக நியமித்துக்கொள்ளுங்கள்" என்றுகூறினான்.

[இராஜ்ஜியபாரத்தை விடலாகாதென்று கூறிய அமைச்சர்களுக்கு மகாராஜன் அதனது துன்பத்தைக் கூறி, வனத்திற் கேகல்].

அதனைக்கேட்ட அமைச்சர்கள் "மன்னர் மன்ன! முதலில் உம்முடைய தந்தையாரும் உம்மையே இக்கருநாடதேசத்திற்கு அரசராகவெண்ணி, இளமைப்பருவத்திலேயே உமக்கு மணிமுடி சூட்டினார்; அதுமுதற்கொண்டு தேவரீர் யாதொருதீமையு முண்டாகாவாறு உமது தோள்வலியால் இவ்வுலகத்தைப் பாதுகாத்து வந்தீர்; அத்தன்மையுள்ள நீவிர் வனத்திற்குச் செல்லுவீராயின், இனிமேல் நீதியினாலும் நுண்ணறிவினாலும் அன்பினாலும் உம்மைப்போன்றொருவர் இவ்வுலகை ஆளுதற்கிருக்கின்றனரோ? ஆதலால், தாங்கள் நினைக்குமிவ்விஷயம் உலகியற்கைக்கு ஒத்ததாகாது; இவ்வுடம்பும் இச்செல்வமுமல்லாமல் இவற்றிற்கு வேறாக விருப்பனயாவை? ஒன்றுமில்லையே; இவையல்லாமலும் நீங்

கள் வனத்திற்குச் சென்றால், உமது குடும்பத்தாரெல்லாமல் இவ்வுலகத்தாரும் தம்மைக்காப்பாரில்லாமையால் வீணையலைவர்; யாங்களும் சஞ்சலமடைவோம்; இத தன்மையுள்ள எங்களைத் தேவரீர் பரிதவிக்கவிட்டு வனத்திற்குச் செல்லுதல் நீதியாகாது; ஆதலால், எங்களுக்கு விளங்க இதற்கு விடைகூறல் வேண்டும்" என்று பணிவாகக் கூறினர். தனது மந்திரிகள் இவ்விதங்கூறியதைக்கேட்ட அவ்வைராக்கிய அரசன் அவர்களை நோக்கி, "உலகம்சத்தியம்; அஃதென்றும் [illegible]தென்று நினைத்திருப்பவர்க்கு உலகம் சத்தியமாகாது; அழிந்துபோம் என்று எவ்விதமாகக் கூறினாலும்விவேக முண்டாகாது; எனக்குரிய இவ்வரசின் தன்மை யற்ப மானதாம்; இதனாலுண்டாகுந் துன்பத்[illegible] அளவில்லையாம்; அரசின்றன்மை யவ்வாறிருந்[illegible]லைத் தத்துவ ஞானசாஸ்திர ஆராய்ச்சியில்லாமையால் நீங்களறியாதிருக்கின்றீர்; நீங்கள் இவ்வுலகவாழ்வு இன்பமயமென்று எக்காரணத்தால் தீர்மானித்தீர்கள்; இனி யெக்காலத்தில் உங்களுக்கு இவ்வுலகவாழ்வு இன்பமயமானதன்று; துன்பமயமானதென்று தோன்றும்? தத்துவஞானசாஸ்திர ஆராய்ச்சியில்லாத உங்களுக்கு உலகவாழ்வு இன்பமயமானதென்னும் புத்தியே யுண்டாகும்; யான் பொரு

ந… கூறிய இதற்கு யுக்தி தோன்றுது" என்று பல விதமாய்ச் சிரித்துக்கூறிப் பின் "நீங்கள் நில்லுங்கள், நில்லுங்கள்" என்று சொல்லி, அவர்களை யங்கு நிறுத்தி, தன்னு அரண்மனையினின்றும் நீங்கி, அந்நகரவீதியில் நடந்துசென்றனன். அரசக்கோலத்தையொழித்துத் தனியே நடந்துசெல்லும் அவ்வரசனை அந்நகரவாசிகள் யாவரும் கண்டு வந்து கண்டு, பெருந்துன்புடைந்து அவனைப் பின்தொடர்ந்து சென்று முகம்வாடி உடல் மெலிந்து கடலோசைபோலவென்று கதறி அழுதார்கள்.

[தன்னைத் தொடர்ந் தழுது… களுக்கு அரசன் சமாதானம்.]

…ஜன் தன்னைத் தொ… றியழுகின்ற தன் நகரவாசிகளை நோக்கி, "என் … அன்பு மிக்க குடிகளே! † எவரும் தாம்தாம் செய்த வினையளவிற் கேற்றவாறு தாம் தாம் பிறப்பில் மாறிப்பிறப்பார்; எவரும் தாந்தாஞ்செய்த வினையளவிற் கேற்ற

---

† "தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார், பூந்தாமரையோன் பொறிவழியே - வேந்தே, ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்று, வெறுத்தாலும் போமோ விதி" என்பது நல்வழி.

வாறு தாம் தாம் சுகதுக்க வடிவபோகங்களை யனுப விப்பர்; மாறியனுபவியார்' என்று சாஸ்திரங் கூறு மாயின், யார்க்கு யார் துணையாவர்? இவ்விஷயத்தை நீங்கள் ஆலோசனை செய்துபாருங்கள்; ஆதலால், எவரும் தத்தம் சரீரம் நன்றாயுள்ளபோதே விரை ந்து, நமக்குத் துணையாயிருப்பவர் யாரென்று ஆராய் ந்து, தாம்தாம் அத்துணைவரை யடைதல் நியாயமாம். வினை காரணமாக நம்மை யடையுந் துணைவர் துணைவ ராதல் கூடுமோ? துணைவர் வினையுள்ளவளவும் நம் மோடு கூடியிருப்பர்; அவ்வினை யொழியுமாயின், அவர் நம்மைவிட்டுப் பிரிந்துபோவர்; வினையளவாக வரும் துணைவரது இயல்பு இத்தகையதாம்; மெய்யுணர்வி னியல்பு அத்தகையதன்றாம்; இனி நான் உங்களிடத் தில் அரசனாக விருக்க வினையானதில்லை; அவ்வினை அனுபவத்தா லொழிந்துபோயது; அதனால் யான் தத் துவஞான மொன்றையே விரும்பி, பரிசுத்தமான வனத் தை யடைய விருப்பங்கொண் டிருக்கின்றேன்; நீங்கள் நில்லுங்கள்; நில்லுங்கள்" என்று கூறி அன்னியர்போ லச் சென்றனன். அரசன் அவ்வாறு கூறி அன்னியர் போலச் செல்வதைக்கண்ட அவர்கள் கண்ணீர் சொரி யக் கதறியழுது, அவ்வரசன்பின் செல்லாது நின்றார் கள்.

[தன்னைவந்து தடுத்த தன்னுறவினர்க்கு
அரசன் சமாதானங் கூறல்].

மகாராஜனது சுற்றத்தார் தமது வேந்தன் துறவறத்தை மேற்கொண்டொழுக விரும்பி வனத்திற்குச் செல்வதையறிந்து வந்து, அவ்வரசன் பின்னே சென்று "நீங்கள்வனத்திற்குச் சென்றால், எங்களை யாவர் காத்திரட்சிப்பார்? ஒருவருமில்லரே! ஆதலால், நற்குணங்களுக்கு உறைவிடமாயுள்ள தாங்கள் எங்களைப் பரிதவிக்கவிட்டு வனத்திற்குச்செல்லுதல்நீதிஆகாது" என்றுகூறினார்கள். தனது உறவினர் கூறியவற்றைக் கேட்டவரசன் அவர்களை நோக்கி, "என்னை நீங்கள் இவன் நமது உறவினனென்றெண்ணித்தொடர்ந்து வருவது தகுதியாகாது; ஆராய்ந்துநோக்குமிடத்து எல்லாவுயிர்களுக்கும் உறவாயிருப்பது ஞானமாம்; பகையாயிருப்பது அஞ்ஞானமாம். ஆதலால், நீங்கள் உறவாயிருப்பதான அந்த ஞானத்தையடைந்து, பகையாயிருப்பதான இந்த அஞ்ஞானத்தினின்றும் நீங்கி, (*பன்மையில்லாது) †ஒருமையாக உறவாயிருப்பது ‡ தனக்குத்தானேயா மென்றுணர்ந்து, தனக்கு அன்னியமாயுள்ள உறவினரை யொழித்து,

---

* பன்மை - பல. † ஒருமை - ஒன்று. ‡ தனக்கு - ஆன்மாவிற்கு.

இனிமையாக விரும்பீராக'' என்றுகூறி அன்னியன் போலச் சென்றனன்.

[தன்னை வந்து தடுத்த தனது தந்தைதாயர்க்கு அரசன் சமாதானங் கூறல்].

பின் அம்மகாராஜனது தந்தைதாயிருவரும் பெறலரும் புத்திரன் தவஞ்செய்தற்பொருட்டு வனத்திற்குச் செல்லுகின்றானென்றறிந்து, உளம்பதைத்து உடல்நடுங்கிப் புத்திரவிருப்பத்தால், தமது புத்திரனது பின்னேசென்று, ''மைந்தனே! இங்கேவா? வயோதிகராகிய எம்மிருவரையும் பாதுகாப்பதற்கு நீ எவரை யேற்படுத்தியிருக்கின்றாய்? உன்னுடையமனம் எங்கே சென்றிருக்கின்றது? மகனே! உன்னுடைய திருமுகத்தை யெமக்குத் திருப்பிக்காட்டக்கடவாய்; உன்னை நொந்து பெற்றவயிறு எரிகின்றது'' என்று கூறினார்கள். தனது தந்தை தாயருரைத்த மொழிகளைக்கேட்டு அரசன் அவர்களை நோக்கி, ''ஆத்மாவை நோக்குமிடத்து, †நித்

---

† நித்தியம்-உற்பத்தி நாசமில்லாதது. அநித்தியம்-நாசமாவது,உற்பத்தி நாசமாவதுடையது. உபாதானகாரணம்-முதற்காரணம்; உற்பத்தி ஸ்திதி லயங்களின் காரணம் முதற்காரணமெனப்படும். கடத்திற்கு மண் உற்பத்தி ஸ்திதி லயகாரணமாயிருப்ப திங்குணர்தற் பாலதாம்.

தியமாயுள்ள அதற்குத் தாய்தந்தையர் எப்போதுமிலரா வர்; இவ்வுடம்பை நோக்குமிடத்து அநித்தியமாயுள்ள அதற்குச் சிறிதும் நீர் உபாதான காரணமன்று; ஆனால், அஃது* ஆவரணம் விட்சேபமென்னுமிரண்டுசக்திகளை யுடைய மாயையினின்றும் சொப்பனப் பொருள்களை போல உண்டாயதாம்; இவ்வியல்பினை இங்காராயுமிடத்து இவ்வுலகத்தில் என்னை மகனாகப்பெறுதவர் ஒருவரு மிலராவர்; நீங்களும் அத்தன்மையரேயாவீர்; எம்மை மக்களாகப் பெறுதவ ரொருவரு மிலரென்னும் பூரண அறிவில்லாதவர்களே! நீங்கள் நில்லுங்கள்; நில்லுங்கள்'' என்று கூறி அன்னியன்போலச் சென்றனன்.

[கண்ணை வந்து தடுத்த தன் மனைவிக்கு அரசன் சமாதானங் கூறல்].

மனைவிக்குரிய இலக்கணங்களைக் கூறும் நூலில் சொல்லப்படும் இலக்கணங்களையெல்லாம் தனக்குரிமை

---

* ஆவரணம் விட்சேப மென்னு மிரண்டு சக்திகளையுடைய அநாதிபாவ வடிவ அஞ்ஞானம் மாயையெனப்படும். (1) ஆவரணத்திற்கு (மறைப்பிற்கு)க் காரணமாய சக்தி ஆவரண சக்தியாம்; (2) விட்சேபத்திற்கு (தோற்றத்திற்கு)க் காரணமாய சக்தி விட்சேபசக்தியாம்.

யாகவுடையவளாகிய அவ்வரசனது நன்மனையாள் தன் கணவன் நாட்டைத்துறந்து தவஞ்செய்யக் காட்டிற்குப் போகின்றானென்றறிந்து, நடுநடுங்கி வந்து, தன் கணவனைப் பின் தொடர்ந்து சென்று, மனமுருகி, அவனெதிரே நின்று, அன்போடு அவ்வரசன் பாதங்களை வணங்கிக் கதறியழுது, பதைபதைத்து, கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வொழுக, "உம்மைவிட்டுலகத்தில் ஒரு கணப்போதேனுமிரேன்; இறந்துபடுவன்" என்று கூறினாள். தன் மனைவி கூறியதைக்கேட்ட அரசன், அத்தையலை நோக்கி, "மின்னற் கொடி போன்ற இடையை யுடையாளே! நீ யான் கூறுவதைக் கவனமாகக் கேட்கக்கடவாய். உன்னுடைய நாயகனை உனக்குள்ளே நோக்கி நிற்கமாட்டாமல், உன்னுடைய நாயகனல்லாதவென்னையே நீ என்னுடையநாயகனென்று கருதிக் கலங்குவதேனோ? இஃதறிவீனமாம். யாவர்க்கும் நாயகனாக விருப்பவன் பரமேசுவரனவன்; அவனையே யான்தேடிப்போகின்றேன்" என்று கூறினான். அதனைக்கேட்டு அம்மங்கையர்க்கரசி "ஞானமானது ஆண் பாலர் பெண்பாலரென்னு மிருதிறத்தார்க்கும் பொதுவாக விருப்பதாம்; அது பொதுவென்பது சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. சாஸ்திரங்கள் துறவறத்

தை யேற்பவர் அத்துறவறத்திற்குத் தடையாயுள்ள மனையாளையல்லவோ முன்னர் விடவேண்டுமென்று கூறுகின்றன; அவை எனக்கு நாயகராகிய உம்மை யான் விட்டிருக்க வேண்டுமென்று கூறுகின்றனவோ; துறவறநூல்கள் எனக்குஎன்ன!சொல்லுகின்றன?ஒன்று மில்லையே! ஆனதால், உம்மைத்தவிர வேறுகதியெனக் கில்லையெனவெண்ணியான்தேவரீரையடுத்தேன்" என்று கூறினாள். அரசன் தன் மனைவி கூறியவற்றைக்கேட்டு வியந்து, "மாதரசியே! நீ சாஸ்திரவிதி கடவாது பேசினாய்; ஆதலால் நீ விவேகியே யாவாய்; யானோ தேகாதிப் பிரபஞ்சத்தி னாசையையொழித்து வனத்திற்குச் செல்லுகின்றேன்; "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்று சாஸ்திரங் கூறுதலின், என்சொல்லைத் தடுத்துப் பேசுவது உனக்கு விரதமாகாது; நீ நாட்டிற் குச் செல்லக்கடவாய்" என்று கூறித் தன் மனைவியை விட்டு, அன்னியரைப்போல நீங்கிப்போனான்.

### [அரசன் மனைவி வருத்தமுற்றுத் திரும்பித் தன் மாதுலன் வீடடைதல்].

பெண்கள் விரிவாயுள்ள ஞானசாஸ்திரங்களை யோதியுணர்ந்திருந்தாலும், தமது கணவர் தம்மை விட்டு விலக வாழுதல் அருமையாய காரியமாமாதலால்,

அப்பத்தினிமங்கை அன்னியன் போலத் தன்னைவிட்டுச்சென்று தன்னுயகனது செயலைக்கண்டு ஏக்கமுற்றுப் பதைபதைத்து நிற்கமுடியாது ஓவென்று கதறியழுது, தனது பிராரத்தவினையையே வெறுத்துச் சோர்வுற்று, மறைவானவிடத்தில் ஒருவர்க்குந் தெரியாது நின்று மனமுருகித் தேம்பியழுது கீழே விழுந்து, "வேந்தனே! உன்னைவிட்டுலகத்திலிருக்கவோ என்னை ஈசன் படைத்தனன்? உமக்கும் எனக்குமுள்ள வினையின் சம்பந்தமும்இன்றளவில் ஒழிந்துவிட்டதோ? என்னோடு கூடி வாழ்ந்து பிரிந்து சென்ற உம்மை யினி யெக்காலத் திற் காண்பேனோ!" என்றழுது, தன் கணவனுடன் போகாது திரும்பி, நகரத்தையடைந்து தனது * மாதுலனது சார்பிலிருந்தனள்.

[வனத்திற்குச் சென்ற அரசனது நிலைமையைக் கூறல்].

அரசன் தனது நகரத்தைவிட்டு நகரங்களையும் நாடுகளையும் கடந்துசென்று, வனத்தையடைந்து, அங்கு இரவும் பகலும்ஆத்மாவிலேயேநிலையாகவிருந்து சமாதி செய்கின்றவர்க ளிருக்குமிடத்தைச் சேர்ந்து, பரமா

* மாதுலன் - அம்மான் (தாயுடன் பிறந்தவன்).

சிரியர் தனக்கு உபதேசித்த மகாவாக்கியத்தின் அரிய பொருளை அவர்களிடத்து ஐயந்திரிபுநீங்க வினவி, அதற்கவர்கள் விடைகூறக்கேட்டுத் தெளிந்து, அதனால் ஸ்திரமனமுற்று, எவர்கலக்கினாலும் அதனால் கலங்காத ஞானதீரமுடையனாய், பசிவந்தபோது ஊர்க்குள்சென்று பொறுமையாகவிருந்து, வீடுதோறும் பிச்சையுணவினைக் கையையே பாத்திரமாகக்கொண்டு வாங்கிச் சிறிதும் வெறுப்பின்றி, அவ்விடத்திலேயே யுண்டு, அங்கு உலக நாட்டமுடையோர் இவ்வுருவம் பேயென் றெண்ணிச் சிரிக்க, அதற்கு வெட்கமுறாது, இக லோகத்திலும் பர லோகத்திலும் ஆசை யொழிந்து, ஏகனாக உலாவுவானானன்.

அந்தத் தவராஜன் தங்கி வசிக்குமிடமொன் றேற்படுமாயின், அதனால் யான் எனது என்னும் பற்றுண்டாகுமென்றெண்ணி, ஓரிடத்திலும் தங்கி வசிப்பதிலனாயினான்; எவ்வெவ்விடத்திலும் ஏகனாகவே உலாவி, நிர்விகற்பசமாதி செய்வதைவிட் டுலகமுகமாகத் திரும்பாது அச்சமாதியிலேயேயிருக்கத் தீர்மானித்து, தானிருந்த இருந்த இடங்களிலெல்லாம் ஏகமாகிய தன்னையே நோக்கியிருந்தனன். ஏகமாகிய தன்னையே நோக்குதலாகிய நிர்விகற்பசமாதியி லிருக்கும் அத்துறவரசன் அது பூரண நிலையை யடைந்தபோது, தோன்றுகின்ற

மகாமகோபாத்யாய,
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

இவ்வுலகம் எவ்விடத்தினின்றுந் தோன்றுகின்றதென்று நோக்கினான்; அவ்வாறு நோக்கியதனால் அது நினைவில் தோன்றுகின்றதென் றுணர்ந்தான்; பின் தோன்றுகின்ற அந்நினைவும் எவ்விடத்தினின்றுந் தோன்றுகின்றதென்று நோக்கி நின்றான்; அவ்வாறு நோக்கியதனால் அது தோன்றுகின்ற விடத்தைப்பார்த்து, அதுசொரூபத்தில் தோன்றுகின்றதென்றுணர்ந்தான்; அதனால் (உலகம் நினைவிற் றோன்றுகின்றது; நினைவு சொரூபத்திற் றோன்றுகின்றது; சொரூபத்தைத் தவிர நினைவில்லை; நினைவைத் தவிர உலகில்லையென் றுணர்ந்து) தோன்றுகின்ற பொருள்களெல்லாம் ‡ தன் சொரூபமேயாமென் றுணர்ந்தனன்; பின் தோன்றுகின்ற பொருள்கள் (நாமரூபங்களை நீக்கிய விடத்து) † அஸ்திபாதிப் பிரியமாகத் தோன்றுவனவாம்; அதனால் அவை அச்சொரூபமேயாமென் றுணர்ந்து, அஸ்திபாதிப்பிரிய வடிவமாக விளங்குகின்ற நமது சொரூபத்தின்கண் கயிற்றின்கண் அரவுபோலத் தோன்றுகின்ற இவ்வுலகம் அசத்தேயாமென்று தெளிந்து, எஞ்ஞான்று மொருதன்மையதாக விளங்குகின்ற சிவசொரூபந்தானாக

---

‡ தன்சொரூபம் - தனது நிஜவடிவமான ஆத்மா.

† அஸ்திபாதிப்பிரியம் - உண்டாய்த் தோன்றியே யின்பமாதல். அஸ்தி-சத்து; பாதி-சித்து; பிரியம்-ஆநந்தம்.

ஒருசலனமு மில்லா திருந்தனன்; அப்பால் நகரந்தோ றும் (நாடுதோறும்) காடுதோறும் சென்று ‡ பூப்பிர தட்சிணஞ் செய்துவந்து, தோன்றிடும் பொருள்களைச் சிவசொரூபமாகப் பார்க்கும் பார்வை மாறுபடுவதில் லாது, பசி பிணி முதலியவற்றால் தளர்வதில்லாத மனத் தினையுடையவனாகி, (சித்துஞ் சடமுஞ் சிவத்தை விடவில்லை; அதனால், யான் சிவசொரூபமா யிருக் கின்றே னென்னும்) சுத்தநிலைமையைப் பெற்று * மோட்ச சொரூபமாக விளங்கினான். இவ்வாறு விளங்கிய அத்துறவரசன் எந்தத்திக்கிற்கும் அரசன் எம்மைவிட வேறொருவரில்லையென்று பரிபூரண நாட் டத்தா லுண்மையாக எண்ணி, தனது † நிஜவடிவத் தில் தன் [illegible] கற்பிதவடிவத்தைத் தத்துவமசி மகாவா க்கியார்த்த விசாரஞ் செய்தொடுக்கி, (அஸ்திபாதிப் பிரியத்தால்) தோன்றிடும் பொருள்க ளனைத்துமாகிச் சுயம்பிரகாசவடிவமா யிருந்தனன்; பிறகு (தேகத்திரய விலட்சணமாய், அவஸ்தாத்திரயசாட்சியாய், சச்சிதா

‡ பூப்பிரதட்சிணஞ் செய்தல்-பூமியை வலமாகச்சுற்றிவரல்.

* மோட்சசொரூபமாதல் - ஒருபற்றுமில்லாதவனாதல்.

† நிஜவடிவம் - சிவசொரூபமாயுள்ள ஆத்மா; கற்பித வடிவம் - ஜீவன்.

நந்தவியாபக சங்கர வடிவமாயுள்ள) தானேயல்லாமல் வேறொன்றும் உண்மையாகத் தோன்றுவதில்லாத பார மார்த்திக தசையில் தோன்றி விரைந்தழியும் மின் னலையொத்த உலகமானது மித்தையாம்; கற்பிதமாம்; பொன்னைத்தவிரப் பூஷணமில்லாமைபோல என்னைத் தவிர வேறொருபொருளு மில்லையாமெனத் தெளிந்த னன்; பின்னர் உலகத்தைத் தனக்கன்னியமாக வுணர்ந் தால், அது பந்தத்திற்குக் காரணமாம்; அதனைத் தானே யாகவுணர்ந்தால், அதுமுத்திக்குக்காரணமாம்; தோன்று கின்ற பொருள்களெல்லாம் என்னினைவிற் றோன்றுகின் றனவேயாம்; ஆதலாலவைஎன்னினைவைத்தவிரவில்லையா மென்று சிந்தித்து நன்றாகவுணர்ந்து வேற்றுமையில்லா திருந்தனன்; பின், உலகம் தனதோர் ஆக்கினைசக்கரத் தின் கீழானதாகக் கம்பீரமாக விருந்து, அதனை அர சாட்சி செய்யும் அரசனது செல்வமும் அதனாலாகிய போகமும்துரும்புபோலத்தோன்றுதற்குரிய அந்தத்தத் துவஞானவுலகிற் கரசாகி, அதனை முறைதவறாமையாக யூகமதி யென்னும் யுக்தியினாலும் சற்குருவினுபதேசத் தாலும் ஆளுவானாயினான்; அதனால் சர்வதுக்கமும் நிவிர் த்தியாயுள்ள (சீவன் முத்தி) உலகத்தை யடைந்து

† கிருத கிருத்தியனானான்; அப்பால் பந்தம் என்பதும் மோட்சமென்பதும் எஞ்ஞான்றும்(உண்மையாக)இல்லை யாம்; எஞ்ஞான்றுமிருப்பது ஏகமான பரப்பிரஹ்மமே யாம். தீவினையுடையோர் இவற்றையுணராது தத்தமது சங்கற்பத்தால்பந்தமென்றும் மோட்சமென்றும்பலவாறு கற்பித்துக்கொண்டு மிக மயங்குகின்றனர்; ¶ நாசோற்பத்தி யில்லாத பரப்பிரஹ்மம் நாமே யென்று அதனை யெப்போதும் சுருதியுக்தி அனுபவங்களால் நோக்கி, அந்தப் பரப்பிரஹ்மமாகவே விளங்கினான்; அதன்பின் குறையென்பது சிறிது மில்லாத பூரணவடிவமாகி, உள்ளங்குளிர்ந்து சோகமொழிந்து, சிறிதளவாகவேனுந் துன்பமில்லாம லின்புருவமாகி, வசிப்பதற்குரிய இடம் இவ்விடமென்று ஓரிடமுமில்லாமல் சர்வபரிபூரணமாக விளங்குவதையே யிடமாய்க் கொண்டிருந்தான். எங்குந் தானாய் நிறைந்து நின்ற ஏக பரப்பிரஹ்மமாக விளங்கும் இராஜ்ஜியத்தை யாளுகின்றவனும் தடையில்லாமல் எவ்விடமும் (எப்பொருளும்) தானே யாமென்றுணர்ந்தவனுமாகிய அவ்வரசன் பெருங்

† கிருதகிருத்தியனாதல் - செய்யவேண்டிய செயல்களை யெல்லாம் செய்து முடித்தவனாதல்.

¶ நாசோற்பத்தி - நாசமாதலும் உற்பத்தியாதலும்.

காய மிருந்து நீங்கிய பாத்திரத்தின் தன்மை யைப்போல அருவமனத்தைப்பற்றி உருவமனத்தை யொழித்து ஆநந்தவடிவனானன். † உருவமனம் அருவ மன மென்னுமிரண்டனுள் அருவமனம் சீவன் முத் தர்களிடத்திருப்பதாம்; அஃது அவர்கள் விதேக முத் தியடையும்போது நாசமாவதாம். அந்த ஞானவேந்தன் அவ்வருவ மனத்தோடுகூடித் தனது சொரூபத்தினின் றும் பிறழாதிருக்கும் நிலைமையினைச் செவ்வையாகச் சற்குருவருளால் பெற்றுக் ‡ கேவல வடிவமாகி யிருந் தனன்.

† "மனநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும வகுத் துரைப்பா ரிருவகையா வருமி வற்றில், வினவாத சீவன்முத்த ரிடத்தி லொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங் கண்டாய், தனதான சத்துவமாய் மனஞ்சே டித்துத் தமசுரச சுகணசித்தல் சொரூப நாசம், அனகாசத் துவந்தானு மிலிங்க தேக மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம்." என்று கைவல்லிய நவநீதங் கூறுகின்றது. உருவமனம் - சத்துவம், ரசசு, தமசென்னும் முக்குணத்தோடு முள்ளமனம்; அருவமனம் - சத்துவகுண மாத்திரமுள்ள மனம்.

‡ கேவல வடிவமாதல் - ஏகவடிவமாகவிளங்குதல்.

[மகாராஜனது மந்திரிகளுள் ஒருவன் தன்னரசனது வரலாற்றைக் கேட்டுச் சென்று அம்மகாராஜனைக் கண்டு பேசுதல்].

மகாராஜனது மந்திரிகளுள் ஒருவனாக முன்பிருந்த ஓரதிகாரி புருஷன் தனது வேந்தன் தத்துவ ஞானத்தைப் பெற்று, உத்தம முனிவனாகி யெவ்விடத்திலும் ஞானசித்தி யுடையவனா யுலாவிவருதலைப் பிறர் சொல்லக்கேட்டு, நம்மரசனைக் கண்டு பேசவேண்டு மென்று கருதி, அம்மகாராஜ னிருக்கு மிடத்தைத் தேடி வந்தடைந்து, அந்தச் சிவராஜயோகியைக் கண்டு, அவ்வியோகியினது திருவடிகளைவணங்கி, பூமியைப்பூவணையாகவும், ஆகாயத்தை † மேற்கட்டியாகவும், ‡ சந்திராதித்தரை விளக்காகவும், (இயல்பாக வீசும்) காற்றைச் சாமரையாகவும், சர்வசங்கபரித்தியாகத்தை மனைவியாகவும்கொண்டு தானநந்தவடிவமாகவிளங்கி, தேர் யானை குதிரை காலாள் என்னும் சதுரங்க சேனை நமது நகரத்தைச் சூழாநிற்க இரத்தினசிங்காதனத்தில் பலவிதமாய அலங்காரத்தோடிருந்தோமேயென்பதை அற்பமாகவேனு மெண்ணாது,

---

† மேற்கட்டி - விதானம். ‡ சந்திராதித்தர்-சந்திரன், சூரியன்.

கோவண மொன்றைக் கட்டிக்கொண்டு, உடம்புமுற்றும் பிறர் இவரின்னாரென்று கண்டுணராதவாறு விபூதியைப் பூசிக்கொண்டு, தலைமயிரை விரித்துக் கொண்டு, "பிறர் கருணைசெய் தேறியருளல் வேண்டும்; கருணைசெய் தேறியருளல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு வந்துள்ள யானையின் மீதும் தேரின் மீதும் ஏறிச்செல்லாமல், எவ்விடத்திற்கும் நடந்தே சென்று, குறிப்பிட்டதொரு வீட்டிற் சென்று பிச்சையேற்றுண்பதில்லாமல், ஊர் முற்றுஞ் சென்று பிச்சையேற் றுணவுண்டு, இராஜாங்க கோலங்களையொழித்துத் தவக்கோலத்தை மேற்கொண்டு ஒருவனா யுலாவும் தன்னரசனை நோக்கி, "வேந்தர் வேந்தே! உலகத்தில் உமக்கு மேம்பட்ட அரசரொருவருமிலர்; அங்ஙனமாக, நீவிர் இத்தவவேடங் கொண்டு எவ்விடத்துஞ்சென் றுலாவி வருதல் எதனைப்பெறுதற் பொருட்டாம்? இத்தவவேடங் கொண்ட உடம்பால் நீவிர் இவ்வரச போகத்தையன்றி யடைவது யாதாம்? எனக்கு நல்லறிவு உதயமாமாறு அதனைக்கூறியருளல் வேண்டும்; சுவர்க்க முதலிய பதவிகளை யடைய விரும்பினால் முன்னரில்லறத்தை மேற்கொண் டொழுகி, அறத்தை நிலைபெறச் செய்து வருதல் முறைமையாம்; சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தப்

பிராப்தி யென்னும் மோட்சத்தையடைய விரும்பினால் ஆத்மதரிசனஞ் செய்ய முயலுதல் வேண்டும்; ஆத்ம தரிசனத்தால் மோட்சமுண்டாவதாம்; தேவரீர் இவ்விரண்டனுள் எதனை விரும்பி இப்பரதேசிக் கோலங்கொண்டீர்" என்று வினவினான்.

[மகாராஜன் தன் மந்திரி வினவியதற்கு விடை கூறல்]

அதற்கு மகாராஜன் "நற்குண நற்செயல்களைப் பொருந்துதலுடைய மந்திரிகளுள் மேம்பாடுடையவனே! நீ பொருத்தமாக என்னை நோக்கி வினவினாய்; இமைகொட்டு மளவு காலமாயினும் மனம் இதுவேண்டும், அதுவேண்டாம் என்று விஷயங்களில் செல்லாவாறு பொறுமையோடு கேட்பாயாக; நான் நீ வினவிய வினாவிற்குத் தக்கவிடை கூறுகின்றேன். 'உலகத்தில் உமக்கு மேம்பட்ட அரச ரொருவருமிலர்' என்று நீ கூறினாய். அஃது அங்கீகரிக்கத் தக்கதே யாம்.

'சுவர்க்க முதலிய பதவிகளை யடைய விரும்பினால் முன்ன ரில்லறத்தைக் கிரமமாக மேற்கொண்டொழுகி அறத்தை நிலைபெறச் செய்து வருதல் முறைமையாம்' என்று நீ கூறியது அங்கீகரிக்கத் தக்கதாம். 'ஆத்ம

தரிசனத்தால் மோட்சமுண்டாவதாம்' என்று நீ கூறினாய்; துர்ப்பாராச் சேற்றில் பிரியங்கொண்டு நன்றாக அழுந்திக் கிடப்பவர்க்கு ஆத்ம தரிசனஞ் செய்வது எவ்வாறுண்டாகும்?

மனம் ஒரு காலத்தில் சப்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும் விஷயமைந்தனுள் ஒன்றனிடத்தில் செல்லுவதன்றி யிரண்டனிடத்திற் செல்லுவதில்லையாம்; அவ்வாறே அஃது ஒரு காலத்தில் ஒன்றனை நினைப்பதல்லாமல் இரண்டனை நினைப்பதில்லையாம்; அங்ஙனமாயின் † அஷ்டாவதானத்தைச் செய்தல் சம்பவிக்கின்றதேயென்று நீ சங்கிக்கக் கூடும். அஷ்டாவதானஞ் செய்வது மனம் விரைந்து விரைந்து புறநோக்கமாகுங் காரணத்தால் ஒரு காலத்தில் நடைபெறுவது போலத் தோன்றுகின்றது; ‡ உற்றுநோக்கினால் அஃது ஒருகாலத்தில் நடைபெறுவதில்லை, ஆனால் பலகாலத்தில் விரைவாகநடைபெறுகின்றதென்று தோன்றும். மோட்ச நிலைபெற்ற [illegible]ள் நோக்கத்தால் விளங்குவதாம் [illegible]

---

† அஷ்டாவதானம் - எட்டுக்காரியங்களை யொருகாலத்தில் தொடர்பாகக் கவனித்தல்.

‡ உள் நோக்கம் - மனம் புறத்துப் போகாது மடங்கி யொருதலைப்பட் டுயிரையே நோக்கி நிற்றல்.

வடிவ சம்சாரம புறநோக்கத்தால் விளங்குவதாம். இவ்விரு நோக்கத்திற்கும் விளக்கமாக யுக்தி கூறுகின்றேன்; கவனமாகக் கேட்கக் கடவாய்.

கங்கையாற்றிற்குத் தென்திசையில் வசிப்பவர் அதனிடத்துச் சென்று முழுக வடதிசையை நோக்கிச் செல்லாது தென்திசையை நோக்கிச் செல்லுவாராயின், அக்கங்கையாற்றின்கண் சென்று முழ்குதல் கூடுமோ? கூடாதன்றோ? அரசர்கள் உலகம் பகை பிணி முதலியன வில்லாது வாழ்தற் பொருட்டு மந்திரிகளுடன் ஏகாந்தமான விடத்திருந்து ஆலோசனை செய்பவராயிருக்கின்றனர்; அவர்கள் மோட்சமடைதல் எங்ஙனமாம்? கங்கையாற்றிற்குத் தென்திசையில் வசிப்பவர் வடதிசையை நோக்கிச் செல்லாமையால் கங்கையையடையாமைபோல, இல்லற வாழ்க்கையிலிருப்பவர் புறநோக்குடையவர்களாக விருத்தலால் மோட்சத்தை யடைவதில்லையாம். மந்திரி! நீ இவ்விஷயத்தை நன்கு கூர்ந்து நோக்கக் கடவாய்.

ஒருவனுக்குக் குடும்பம் பகையாகத் தோன்றுமாயின், அவன் மறுபடியும் அக்குடும்பத்தில் அன்பு வைத்து அதனை மேற்கொண்டொழுகுவானோ? குடும்

டம் நமக்குப் பகையாயிருக்கின்றதென்று நாலாராய்ச்சி யளவாக வுணர்ந்தவர் குடும்பத்தை விட்டு நீங்குவதே யில்லையாம்; ஆனால், அவர் எல்லாம் சிவமயம் என்றுகூறி வாசக ஞானிகளா யிருந்தொழிவர். "நாமோற்பத்தி யில்லாத மோட்சத்தை யடைந்து பிறப்பை யொழித்தற்குத் தத்துவஞான மொன்றே போதுமானதாம்; துறவறத்தை மேற்கொண் டொழுகுதல் வேண்டுவ தின்றாம்" என்று ஞானசாஸ்திரங்கள் கூறுதல் மந்தாதிகாரியை நோக்கியேயாம்; ஆனால், அவை அதிதீவிர அதிகாரிகளை நோக்கி அவ்வாறு கூறுவதில்லையாம்.

[மகாராஜன் தன் மந்திரிக்குத் தத்துவோப தேசஞ் செய்தல்.]

தோன்றுகின்ற பொருள்களி னியல்பையும் அவற்றை முதற் காரணமாயும் நிமித்தகாரணமாயு மிருந்து தோன்றச் செய்கின்ற பொருளி னியல்பையும் விளக்கமாக வுனக்குக் கூறுகின்றேன்; பிறவித்துன்பமொழிய அவற்றை நீ கேட்கக்கடவாய். தோன்றுகின்ற பொருள்கள் அநித்தியமும் அசுத்தமும் துக்கமுமாக விருப்பனவாம்; அவற்றைத் தோன்றச் செய்கின்ற பொருள் (சிவம்) நித்தியமும் சுத்தமும் சுகமுமாக விருப்பதாம்.

[தேக நிலையாமையைக் கூறல்.]

நமக்குப் பாலப்பருவமானது விரைந்து போய்விடும்; அதன்பின் வரும் குமாரப்பருவமானது அங்ஙனமே போய் விடும்; அப்பால் வரும் யௌவனப் பருவமும் அங்ஙனமே போய்விடும்; இதன் முடிவில் வயோதிகப் பருவம் வருவதாம். இது வந்தபோது நாம் தடியைப் பூமியிலூன்றிக் குனிந்தெழுந்து தள்ளாடி நடக்கும் நிலைமையையுடையவராவோம். அப்போது யமன் நம் முயிரைக் கொண்டுபோக வருவான்; அவன் நம்முயிரைக் கொண்டு போனவுடனே நமக்குரியவரா யுள்ளாரனைவரும் கல்லென்றிரைச்சலிட்டழுது, நமக்குள்ள பெயரை நீக்கி, நம்முடம்பிற்குப் பிணமென்றொருபெயரிட்டு அதனைச் சுடுகாட்டில் கொண்டுபோய் வைத்துத் தீமூட்டி யெரித்தல் நிச்சயமாம்.

நம்முடம்பு கருப்பைக்குளிருக்கும் போது மழிந்து போவதாம்; கருப்பையிலிருந்து தோன்றிய பின் பால (குழந்தை)ப் பருவத்திலும் அழிந்து போவதாம்; குமாரப் பருவத்திலும் அழிந்து போவதாம்; யௌவனப் பருவத்திலும் அழிந்து போவதாம்; ஒவ்வோரவயவமும் நடுங்குதற் கேதுவாய வயோதிக (கிழ)ப்பருவத்திலும்

அழிந்துபோவதாம். பால, குமார, யௌவன, வயோதிக மென்னும் நால்வகைப் பருவமும் ஏற்பதற்குரிய உடம்பு அந்நால்வகைப் பருவத்துள் எந்தப் பருவத்திலாவது உயிர் நீங்கப் பெற்றழிதல் அதற்கியல்பா யிருப்பதாம். நாம் உடம்போடு கூடிவாழும் வாழ்க்கை இவ்வாறு நிலையில்லா திருப்பதாம்.

[உலக நிலையாமையைக் கூறல்.]

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பஞ்ச பூதங்களும் அழிந்து போவனவாம்; சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும் அழிந்து போவனவாம்; வஞ்சனை செய்வதை யியல்பாகவுடைய அசுரர்களும் அழிந்துபோவார்கள்; தேவருலகமும் அழிந்துபோவதாம்; ஆற்றலாலும் தவத்தாலும் சிறந்த அரக்கர்களும் அழிந்து போவார்கள்; இந்திரனது பதவியும் அழிந்து போவதாம்; பிரமனது பதவியும் அழிந்து போவதாம்; திருமாலது பதவியும் அழிந்துபோவதாம். பரமபதமொன்றே அழியாதிருப்பதாம்.

[தேகத்தினழிவைக் கூறல்.]

நம்முடம்பு தோல், இரத்தம், எலும்பு, மாமிசம், சுக்கிலம், † மேதை, ‡ மச்சையென்னும் சப்ததாதுக்க

---

† மேதை - நிணம். ‡ மச்சை - மூளை.

ளும் ஒன்றாய்க் கூடி யிருப்பதனால், பருத்துத் தோன்று வதாம்; இதுதா னுட்கொண்ட எப்பதார்த்தங்களையுந் தன் வடிவமாகச் சேர்த்தடக்கிக் கொள்ளுவதாம். நுண் ணறி வில்லாதவர் இவ்வுடம்பை இது தோல், இஃது இரத்தம், இஃது எலும்பு, இது மாமிசம், இது சுக்கி லம், இது மேதை, இது மச்சையென்று வேறு வேறாக நோக்காமல் உடம்பின் வாழ்க்கையைச் சதமென வெண் ணிச் சந்தோஷமடைந் திருக்கின்றனர். சஞ்ஞான்றும் புனிதமாயிருப்பது பரமபதமேயாம்.

[தேகத்தால் வரும் துன்பத்தைக் கூறல்.]

மந்திரி! தேகத்தால் வரும் துன்பத்தைக் கிரமமா கக் கூறுகின்றேன்; நீ கேட்கக் கடவாய். உலகமுழுதும் சிருட்டி, ஸ்திதி, சங்காரம் என்னும் முத்தொழிலுங் கிரமமாக நடைபெற்று வருவனவாம். † சிருட்டி காலத் தில் நமக்குக் கருப்பாசயப்பை யுறுத்தல், அதிற் சலம் பூரித்தல், உதராக்கினியால் வேவுதல், பிரசூதவாயு முரித்துத் தள்ளுதல், யோனித்துவாரத்தில் நெருக்குண் டல் என்பனவற்றால் ஐவகைப் பெருந்துன்பங்க ளுண் டாகின்றன; ‡ சங்கார காலத்திலுண்டாகும் துன்பங்கள்

† சிருட்டி காலத்தில் - ஜனன காலத்தில்.

‡ சங்காரகாலத்தில் - மரணகாலத்தில்.

சிருட்டி காலத்தி லுண்டான துன்பங்களிலும் எண் மடங்கதிகமாக விருப்பனவாம்; ஸ்திதிகாலத்தில் இளமைத் துன்பமென்றும் † மூப்புத்துன்ப மென்றும் இருவகைத் துன்பங்க ளுண்டாகும்.

விருத்த (கிழப்) பருவத்தில் பெருந்துன்ப முண்டாவதாம்; இளமைப் பருவத்தில் வருந்துன்பம் விருத்த பருவத்தில் வரும் துன்பத்திலும் இரண்டுமடங்கதிகமாக விருப்பதாம், இளமைப் பருவத்துள் வரும் துன்பங்களுள் நோயால் வரும் துன்பம் மிகப்பெரியதாம். இளமைப் பருவமானது பால(குழந்தை)ப் பருவம், குமாரப் பருவம், யௌவன (காளை)ப் பருவமென மூன்று வகையதாம். பாலப்பருவத்தில் இப்பொருள் கிடைக்கும், இப்பொருள் கிடைக்காதென் றறியாமையால் துன்பமுண்டாகின்றது; குமாரப் பருவத்தில் தந்தை தாயா உவாத்தியாய ரென்னுமிவர்கள் கோபித்துப் பேசுவதற்கும் அடிப்பதற்கும் பயந்து, மனங்கலங்குவதால் துன்ப முண்டாகின்றது; யௌவனப் பருவத்தில் பசிநோயையும் காமநோயையும்விரைந்து கெடுத்தற்பொருட்டுப் பொருளைத் தேடமுயன்று, அது காரணமாக

---

† மூப்பு - கிழத்தனம்.

இரவும் பகலும் ஓய்வில்லாது யாதாவதொரு வேலையைச் செய்வதால் துன்ப முண்டாகின்றது.

[பொருளால் வருந்துன்பத்தைக் கூறல்.]

நமக்குப் புண்ணிய வசத்தால் பொருளுண்டாமாயின், அதனை நாம் கள்வர் தாயத்தார் முதலாயினோ ரபகரித்துக் கொள்ளாவாறு காப்பாற்றுவதால் துன்பமுண்டாகின்றது; ஒருவன் அரசனாகவிருந்தால், அவனுக்கு அவனினுஞ் சிறந்த அரசன் வாயிலாகத் துன்பமுண்டாகின்றது; ஒருவன் உலக முழுதையும் தனது வெண்கொற்றக்குடைக்கீ ழிருந்தாளும் சக்கரவர்த்தியானாலும் அவன் நமக்கு நோயுண்டாகுமே, மரணமுண்டாகுமே யென்னும் பயத்தாலும் † மறுமையில் யாதுண்டாகுமோ என்னும் பயத்தாலும் எப்போதும் வாட்டமுற்றுத் துன்பத்தை யடைகின்றான்.

[சுவர்க்கத்திலும் சுகமில்லை யெனல்]

தேவர்களுக்கு அசுரரது பகை யிருக்கின்றது; மகிழ்ச்சியும் வாட்டமும் மிகுதியாக 'விருக்கின்றன; உடம்பினிடத்து நீங்காத நோயுமிருக்கின்றது; புணர்ச்சி

---

† மறுமையில் - இனிவரும் பிறப்பில்.

விருப்பமுமிருக்கின்றது; (இது வேண்டும்; அது வேண்டுமென்னும்) ஆசையுமிருக்கின்றது; (சுகதுக்க வடிவ) போகத்தில் அழுந்தி யிருத்தலும் மிகுதியாக விருக்கின்றது; † கற்பகாலத்தில் சாதலு மிருக்கின்றது. இவ்வாறு பல திறத்தனவாகிய துக்கங்கள் நீங்காதிருக்கின்ற சுவர்க்கலோகத்தில் என்ன சுகமுண்டாம்? இல்லையா மன்றே?

[எவ்வகைப் பிறப்பிலும் இன்பமில்லையெனல்.]

தேவரடையும் துன்பப்பகுதிகளும், மக்களடையும் துன்பப்பகுதிகளும் இவ்வாறாக விருக்குமாயின், தாழ்ந்தனவாகப் பிறந்துள்ள ஆடு மாடு முதலிய மிருகம், காகம் பருந்து முதலிய பறவை, எறும்பு புழு முதலிய ஊர்வன, மீன் நத்தை முதலிய நீர்வாழ்வன, மரஞ் செடி முதலிய தாவரமென்னும் ஐவகைப் பிராணிகளிடத்து ஒழிதலில்லாதுள்ள துன்பங்களுக்கு ஓர் உவமானமு மில்லையாம்; ஆகவே, சீவர்கள் நரகத்திலடையும் பெருந்துன்பத்தை வரையறுத்துச் சொல்வது எவ்வாறாம்? பிறப்பில் நோயேயுண்டாம்; மோட்சமே சுகவடிவமாக விருப்பதாம்.

---

† கற்பகாலம் - உலகமழியுங்காலம்.

[கொள்ளுவதிது; தள்ளுவதிது எனக் கூறல்.]

மந்திரி! இழிவையுடைய இந்த மாயாப் பிரபஞ்சம் (எஞ்ஞான்றும் தனக்கெனவொரு பொருளில்லாமையால்) அசத்தேயாம்; உயர்வையுடைய அந்தப் பிரஹ்மம் (எஞ்ஞான்றும் பொய்யென்று நிச்சயித்தற்குரியதாகாமையால்) சத்தேயாம் என்று நூலுணர்வாலும் நுண்ணுணர்வாலும் ஆராய்ச்சி செய்து தேர்ந்துணர்ந்தவர் எதனைத் தள்ளுவர்? எதனைக் கொள்ளுவர்? † இந்த மாயாப் பிரபஞ்சத்தைத் தள்ளி, ‡ அந்தப் பிரஹ்மத்தையன்றோ பற்றி நிற்பர். இவ்விஷயத்தை நீ நன்றாக யூகித்தறியக் கடவாய். இந்த மாயாப் பிரபஞ்சத்தைப் பொய்யெனவறிந்தவர் இதனிடத்து யானெனதென்னு மபிமானத்தோடு பொருந்திவாழ்வதுண்டாமோ? அந்தப் பிரஹ்மத்தை மெய்யென்றறிந்தவர் அதனையடைய முயலாதிருப்பதுண்டாமோ? அமைச்ச! இவ்விஷயத்தின்கண் ஐயப்பாடுளதோ? இருக்குமா

† மாயாப்பிரபஞ்சத்தைத் தள்ளுதல் - தேக முதலியவற்றுள் யானெனதென்னும் அபிமானமில்லாதிருத்தல்.

‡ பிரஹ்மத்தைப் பற்றுதல் - ஆத்மாவே பிரஹ்மம்; பிரஹ்மமே ஆத்மாவென் றுணர்ந்து, உணர்ந்தவாறு நிற்றல்.

யின், அதனை நன்றாக ஆராய்ந்து நோக்கக்கடவாய்; (இப்பிறவிதப்பினு லெப்பிறவிவாய்க்குமோ என்றுணர்ந்து விரைந்து மோட்சத்திற்குச் சாட்சாத் சாதனமாயுள்ள தத்துவ ஞானத்தைப்பெற்றுச் சம்சார துன்பத்தினின்றுந்) தப்பவேண்டுமென்னு மறிவிலாதவர்கள் இம்மாயாப் பிரபஞ்சத்திலேயே யுழலுவர்; இதனிடத்துள்ள யானெனதென்னு மபிமானத்தை யொழிக்கச் சிறிது முயற்சி செய்யமாட்டார்கள். உலகத்தார் தத்துவ ஞானமில்லாமையாலே பொய்ப்பொருளாகிய இந்த மாயாப் பிரபஞ்சத்தை மெய்ப்பொருளென்றறிந்து, மெய்ப்பொருளாகிய அந்தப் பிரஹ்மத்தைப் பொய்ப்பொருளென்று நிச்சயித்து, (சுகதுக்கங்களால் மொத்துண்டு) வருந்தி யலைகின்றனர்; (உலகந் துயர்வடிவமென்றுள்ளவாறுணர்ந்து, அதனிடத்துப் பற்றுவைப்பதொழிந்தமையால்) மேம்பட்டவர் ஞானசற்குருவினருளால் பொய்ப்பொருளாகிய இந்த மாயாப் பிரபஞ்சத்தைப் பொய்ப்பொருளென்றறிந்து, மெய்ப்பொருளாகிய அந்தப் பிரஹ்மத்தை மெய்ப்பொருளென்றுணர்ந்து, (அதனால் சுகதுக்கங்களால் மொத்துண்டு) வருந்துவதொழிவர். எவர்க்கேனும் குடும்பபாரம் துன்பந்தருவதென்று தோன்றுமாயின், அவர் அதனை விட்டு நீங்கி, ஏகாந்த

மான விடத்தில் தனித்திருந்து, இன்பம் தருவது யாது எனச் சிந்தனைசெய்து, அதனைத் தேட முயலுவது இயல்பாயிருக்கின்றது; எவர்க்கேனும் அக்குடும்ப பாரம் இன்பந்தருவதென்றே தோன்றுமாயின், அவர்க்கு அதனிடத்துப் பிரியம் மிகுதியாவதாம்; ஆகவே, அவர் அதனிடத்தினின்றும் நீங்கவே மாட்டார்; அவர்கட்குப் பிரஹ்மஞானத்தை யடையவேண்டுமென்னும் நாட்டம் எவ்வாறுண்டாகும்? அமைச்சனே! நீ இவ்விஷயத்தை யாலோசித்துச் சொல்லக்கடவாய். எவரேனுமொருவர் மாயாப்பிரபஞ்சத்தி னிழிவை யறிவாராயின், அவர் (திருசிய மனைத்திற்கு மதிட்டானமாயிருப்பதால்) உயர்வாயுள்ள பிரஹ்மத்தை யடையச் சற்குருவைத்தேடிச் செல்லுவர்; மாயாப் பிரபஞ்சத்தினிழிவை யறியாதவர் உயர்வாயுள்ள பிரஹ்மத்தையடைய எந்தக்காலத்திலும் சிந்திக்கமாட்டார். ஆசை கோபம் அகந்தை முதலிய இழிகுணங்களை யுடையவர்க்கு (நெருப்பை நெருப்பென் றுணர்வதுபோல) மாயாப்பிரபஞ்சத்தி னிழிவை யிழிவென்றுணர எந்தக் காலம் வாய்க்குமோ? அமைச்சனே! நீ இதனை யூகித்துணரக் கடவாய். (பேதவாதிகள் ஜகஜீவபரம் அல்லது சித் அசித் ஈச்சுரன், அல்லது பதி பசு பாசமென்பன அநாதி நித்

தியப்பொருள்கள் என்று கூறுகின்றனர். அப்) † பேதவாதிகள் சொல்வதுபோல மாயாப்பிரபஞ்சம் பிரஹ்மத்தினும் வேறெனக்கொள்ளின், இம்மாயாப் பிரபஞ்சம் நம்மினின்றும் நீங்கியதன்றாம்; (அதனால் எப்போதும் நமக்குத் துன்பமே தருவதாம்). அந்த மாயாப்பிரபஞ்சம் (எப்பிடித்துக் கயிற்றின்கண் அரவுபோலக் கற்பிதமாயிருத்தலால்) எம்மை (ஆத்மாவை) யன்றியில்லை யென்றுணர்ந்த ஞானநாட்டத்தால் அம்மாயாப்பிரபஞ்சத்தை விட்ட துறவே பரிசுத்தமான துறவாகும். அத்துறவால் உள்ளம் பூரண சந்திரனைப்போலக்குளிர்ச்சியுடையதாம்; † ஜனனவெப்ப மனைத்தும் ஒழிவனவாம். மந்திரியே! நீ தாங்கள் முன்னிருந்த கிருகஸ்தாசிரமத்திலிருந்தே மோட்சத்தை யடையலாம் என்று கூறுவையாயின், கிருகஸ்தாசிரமத்தி லிருப்பவர் திருந்திய நிர்மல சித்தமுடையவராய்த் தீரரா யிருப்பாராயினும், அவர் குடும்பத்தினின்றும் நீங்கி யேகாந்தமான விடத்திற்றங்கிச் சமாதிசெய்து (யானெனதென்னு மபிமான வடிவ

† பேதவாதிகள் - துவிதிகள்.

† ஜனனவெப்பம் - முத்தாபமாம்; அவை: தன்னை (உடம்பைப்) பற்றிவருந் துன்பமும், பிறவுயிர்களைப்பற்றி வருந்துன்பமும், தெய்வத்தைப்பற்றிவருந் துன்பமுமாம்.

மா யெழுகின்ற) ஜீவபோதத்தை யடக்கவேண்டிய வரா யிருக்கின்றனர். குடும்ப பாரத்தால் வருந்துகின்றவர்க்கு மோட்ச சாதனங்களுள் எது வாய்ப்பதாம்? வாய்க்காதன்றோ? நீ இதற்கு விடை கூறக் கடவாய். முற்பிறப்பின்கண் தத்துவஞான சாதனங்களனைத்தையுஞ் செய்து முடித்து, (இப்பிறப்பின்கண் குருபதேச மில்லாமலே) எல்லாப் பொருளுமாய் விளங்கும் பரப்பிரஹ்மத்தைத் தமது நிஜவடிவமாக வறிந்த பெரியோர் தமக்கினமா (உறவா)யுள்ள இல்லறத்தாரோடு கூடி யிருப்பாராயினும், சர்வஞ் சிவமயமென்னும் ஏகபாவனையினின்றும் நீங்காரென்று சாஸ்திரங் கூறுமாயின், எப்போதும் அகம்பிரஹ்மாஸ்மி(நான்பிரஹ்மமாயிருக்கின்றேன்)என்னும் பாவனையுடையவராயிருப்பவர் உலகநாட்டமுடையவராவரோ? அவர் தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கப்பலேறிச் செல்பவர் கடலின்கண்குறித்த தோரிடத்தில் தாங்கப்பலேறிய துறைமுகத்தை யறியாமைபோல * உலக வியல்பினை யறியா திருக்கின்றனர்.

---

* "திருசியந்தான் படமாகத் திகழுமெனிற் பூமவுருத் திகழா தாகும், இருமையறு பூமவுரு விலங்குமெனிற் றிருசியமற் றிலங்கா தாமே, மருவலுறு மறதீவு தெரியுமெனி னிப்

பேரரசனொருவன் ஓரூரின்கண் வசிக்குமொருவனை (அவன்மீது தான் வைத்துள்ள பிரியத்தால்) ஒரு நாட்டிற்கு அரசனாக்குவானாயின், அவன் முன்பு தானிருந்தவூரைத் தனக்கிருப்பிடமாகக் கொள்ளாது நீக்கி, அந்த நாட்டின் † ராஜதானியின்கண் ஏகபோகமாக விருப்பானேயல்லாமல், தான் முன்பிருந்த ஊரின்கணிருப்பானோ? இருக்கமாட்டானன்றோ? (இங்ஙனமே இல்லறத்தினின்றும் நீங்கித் துறவறத்தை மேற்கொண்டொழுகுகின்றவர் மீண்டும் இல்லறத்தை மேற்கொண்டொழுகுவதில்லையாம்) மந்திரி! நீ இதற்கு விடைகூறக் கடவாய். பிரஹ்மஞான முடையவர் உலகத்தை மெய்ப்பொருளென்று கருதி, (உலக) போகத்தை யடைதற்பொருட்டலைவரோ? அலையாரன்றோ

---

பூமி மறைந்து போகும், தெரிவுறுமே யிப்பூமி மறை[illegible]போமவ்வாறத் தீவுதானே" என்று சதாசிவப் பிரமேந்திரரத்துவித ரசமஞ்சரியில் திருவாய்மலர் தருளியிருப்ப திங்குணர்தற்பாலதாம்.

திருசியம் - காணப்படும் பொருள், புடமாக - நன்றாக பூமவுரு - பிரஹ்மம்.

† ராஜதானி—பிரதான நகரம்.

[illegible]லறத்திற்க ணிருந்தாலும் * பொருட்சார்பினு லு[illegible]யிர்ச்சார்பினாலும் துன்பம் பெருகுதல் கெடுத ல[illegible]ற்சியும், யாம் பலவகையாக முயற்சி செய்

---

* [illegible] பற்றென்பது தானல்லாத உடம்பை யானென்றும், தன்[illegible]டைமையில்லாத பொருளை யெனதென்றுங் கருதி, அவற் றின்கண் அபிமானங் கொண்டிருத்தலாம். தானல்லாத வுட ம்பை யா[illegible]ன்றுகருதி அதனிடத் தபிமானங் கொண்டிருத் தல் அகப்[illegible]றாம்; தன்னுடைமையில்லாத பொருளை யென தென்று கருதி அதனிடத் தபிமானங்கொண்டிருத்தல் புறப்பற் றாம்; இவ்விருவகைப்பற்றுள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு வகைத்தாயி[illegible]ப்பதாம். அகப்பற்று, உடற்பற்று உட்பற்றென விருவகை[illegible]ம்; புறப்பற்று,உயிர்ச்சார்புபொருட்சார்பென விரு வகைத்தாம். (1) உடற்பற்றாவது தானல்லாத ஸ்தூலவுடம்பை யா[illegible] அதனிடத் தபிமானஞ் செய்திருத்தலாம்; ஸ்தூலவுடம்பாவது தோல் இரத்தம் எலும்பு மாமிச முதலிய வ[illegible]லாய வுடம்பாம். (2) உட்பற்றாவது தானல்லாத சூக்கும வுடம்பை யானெனக் கருதி அதனிடத்தபிமானஞ் செய்திருத்த லாம்; சூக்கும வுடம்பாவது பிராணாதி பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம், அந்தக்கரண சதுஷ்டயமென் ப[illegible]டமாம். (3) உயிர்ச்சார்பாவது தன்னுடைமையில் லாத மனைவி மக்கள் முதலாயினரை யெனக் குரியவரென்று கருதி, அவரிடத்தபிமானஞ் செய்திருத்தலாம். (4) பொருட் சார்பாவது தன்னுடைமையில்லாத காணி மனை முதலியவற்றை

தும் நமக்கினிமையைத்தரும் பொருள்கள் கிடைக்கவில்லையென்று அப்பொருள்பற்றிவரும்வாட்டமும், விஷயபோகத்தில் எள்ளளவாகவேனும் ஆசையும், பின் அவ்விஷயபோகத்தைப் பெறவேண்டுமென்று முயற்சிசெய்தலுமாகிய இந்நான்கும் ஒருவர்க்கில்லை யானாலும், அவர் தன்னை (ஆத்மாவை) யறிதற்காகச் சிரவணமனனநிதித்தியாசனவடிவ சாதனங்களைச்செய்யும்போது இல்லறத்தை

---

யெனதென்று கருதி, அவற்றினிடத் தபிமானஞ் செய்திருத்தலாம். இந்நால்வகைப் பற்றுள் ஸ்தூலவுடம்பையும் சூக்குமவுடம்பையும் உடம்பென்னும் நோக்கால் ஒன்றாகக் கொள்ளுமிடத்து அவை அகப்பற்றென ஒன்றும்; உயிர்ச் சார்பையும் பொருட்சார்பையும் புறமென்னும் நோக்கால் ஒன்றாகக்கொள்ளுமிடத்து அவை புறப்பற்றென ஒன்றும். இங்ஙன மன்றிப் பற்று - புறப்பற்று, இடைப்பற்று, உட்பற்றென மூவகையாமெனக் கூறுதலுமுண்டு. (1) உயிர்ச் சார்பும் பொருட்சார்பும் புறப்பற்றாம்; (2) ஸ்தூலவுடம்பை யானென்று கருதி அதன்கண் அபிமானஞ் செய்திருத்தல் இடைப்பற்றாம்; (3) சூக்குமவுடம்பை யானென்று கருதி அதன்கண் அபிமானஞ் செய்திருத்தல் உட்பற்றாம். இது "புத்திரர் மனையா ளாதிப் புறச்சுற்றப் பற்று நீங்கி, இத்திரண் மலவுடம்பா மிடைச்சுற்றப் பற்றும் விட்டே, ஒத்துயிர் விடாத பாச கரணவுட் பற்று மோய்ந்து, தத்துவ மாயிருத்தல் துறந்தவர் சரிதை யையா" என்று [illegible] சாரமென்னும் நூல் கூறுவதா லினிது விளங்கும்.

விட்டுத் துறவறத்தை மேற்கொண்டொழுகுதல் வேண்டும்; இதுவே அவர்க்குத் தகுதியாம். தீமை பொருந்திய இல்லறவாழ்க்கையி னின்பத்தை வெறுத்து அந்தச் †செம்பொரு ளின்பத்தை விரும்பிச் ‡சிரவண மனன நிதித்தியாசன வடிவசாதனங்களை மேற்கொண் டொழுகும்போது சப்தாதி விஷயங்கள் தடைசெய்வனவாம்; அவ்வொப்பில்லாத செம்பொருளின்பம்தான் மேம்பட்டு விளங்குவது வாயிலாகச் சாத்தியமான (சித்தித்த) விடத்து அவ்விஷயங்கள் தடையாகத் தோன்றுவாம்; ஆதலால், துறவறத்தி லுண்டாகும் ஞானமே ஞானமாம்; துறவறமல்லாததி (இல்லறத்தி) லுண்டாகும் ஞானம் அஞ்ஞானமாம்.

(ஞானம் துறவறத்திலன்றி இல்லறத்திற் சிறந்து விளங்குவதின்றெனல்).

தத்துவஞானம் இல்லற வாழ்க்கையிலிருப்போரிடத்திருப்பதில்லையாம்; இருந்தாலும் அஃது இரும்பாபாணத்தில் வைத்திழைத்த இரத்தினம்போல விளங்குவதாம்; இல்லற வாழ்க்கையை யொழித்துத் துற

---

† செம்பொரு ளின்பம் - பிரஹ்மாநந்தம்.

‡ கேட்டல், சிந்தித்தல், தெளிதல்.

வற வாழ்க்கையை மேற்கொண் டொழுகுமோ ரிடத் துள்ள தத்துவஞானமோ பொன்னுபரணத்தில் வைத் திழைத்த இரத்தினம்போல விளங்குவதாம். ஆகவே, ஞானிகட்கு இல்லறவாழ்க்கை சிறப்புடையதன்றாம்.

(இல்லறவாழ்க்கை துறவறவாழ்க்கைக் கேதுவாமெனல்).

(இல்லறத்தில் வழுவாதொழுகி அறிவுடையவர ய்ப்பிறப்பிற்கஞ்சி நிற்பவரே துறவறத்தைமேற்கொள்ளு தற்குரியவராயிருத்தலின்) துறவற வாழ்க்கையைப் பெறுதற்கு முன் யாவரும் இல்லற வாழ்க்கை யிருப்பது நியாயமேயாம். (முன்னை நற்றவத்தா மனமாசு தீரப் பெற்றமையால்) சர்வதுக்க நிவர்த்தி பரமாநந்தப் பிராப்திவடிவ மோட்சத்தை இல்லற வாழ்க்கையிலிருந்தே யறிந்தடைந்த விவேகிகளும் பலர் பின்னும் இல்லறவாழ்க்கையிலேயே யிருந்தமை யால், இல்லறவாழ்க்கையுடையோருட்பலர் மோட்சத்தை யில்லறவாழ்க்கையிலிருந்தே யறிந்தடைதல் கூடாதே யென்று துறவற வாழ்க்கை யுடையாரை நோக்கி ஏசித்துப் பேசுகின்றனர். புறப்பற்று, அகப்பற் றென்னு மிருவகைப்பற்றினையும் விட்டிருப்பவர் இல்லற றம் துறவறமென்னு மிரண்டனுள் இல்லறமே சிறப் புடையதாமென்று கூறுவரோ? அமைச்சனே! நீ இதனை

லோசித்துப் பார்க்கக் கடவாய் ஞானிகட்கு இல்லற
ழ்க்கையானது ஒருவாற்றானும் சிறப்புடையதன்

(ஞானிக ளியல்பினைக் கூறல்).

சகலாவஸ்தையையும் கேவலாவஸ்தையையும் பிர
ன பூர்வகமாகச் சமாதியப்பியாசத்தா லொழித்து,
வஞானமென்னும் † ஒளிப்படையினைக் கொண்டு,
நிஜவடிவமாகிய ஆத்மாவை விளங்காவாறு
துள்ள இருள் வடிவமாயுள்ள அஞ்ஞானமென்னு
ச் சிறிதுங் குறையாது வெட்டியழித்து
வது ஆத்மதரிசனத்தால் சொரூபாவரணத்
செவ்வையாகக் கெடுத்து), நித்தியமான மோட்
பறிந்தடைந்தவர்கள் உலகத்தில் ‡ பாலர்போல

---

சக[illegible]தை - சித்த விருத்தி விரிவதாம்; கேவலா
த [illegible]த்தி யொடுங்குவதாம். சாக்கிர சொப்பன
டை[illegible]லாவஸ்தை யென்றும் சுழுப்தியைக் கேவலா
தை யெ[illegible]ம், ஒன்றனை நினைத்தல் சகலாவஸ்தை யென்
ம் அதனை மறத்தல் கேவலாவஸ்தை யென்றும் கூறுவது
டு.

† ஒளிப்படை - பிரகாச வடிவுவாள்.

‡ "பிள்ளை யாமுணர்ச் சிந்தைசெ யாமையிற் பித்தன்
கொள்ளு [illegible] மறுத்தலிற் கூளி
உள்ள [illegible]ளானதுணர் முனிக்குப்
பிள்ளை பித்தன்வன் பேய்நிகருரைத்தனர் பெரியோர்"
ன்ற குறுந்திரட்டில் கூறுவதிற் குணர்தற் பாலதாம்.

வும், பித்தர் போலவும், பேய்பிடியுண்டோர் போலவு மிருப்பர்; கிராமங்களுள் சென்று அங்குள்ள வீடுகளில் கூலியாளாகவு மிருப்பர்.

[ஞானிகள் இல்லறவாழ்க்கையை விரும்புவதில்லை யெனல்].

* ஒருவர்க்கு நல்வினை தீவினையென்னு மிருவினை யின் பயன்களாகிய சுகதுக்கமிரண்டும் தராசின் தட்டிரண்டிலும் வைத்த பொருள்கள் சமமாகத் தோன்றுதல்போலச் சமமாகத் தோன்றுமாயின், அவர்க்குத் தத்துவஞானஞ் சிறிதுண்டாவதாம்; அப்போதவர் இல்லற வாழ்க்கை யின்பத்தை வாந்தியெடுத்த சோற்றைப்போலக் கண்டு வெறுத்து, இல்லறம் நல்லறமென்னுங் கருத்தை யொழித்து, அதனை விடுதற்குரியவராவர். அவர்க்கே இல்லறவாழ்க்கை யங்ஙனந் தோன்று

(உணா-உணவு; ஆர்வம்-விருப்பு; கூளி-பேய்).

* ஸ்ரீ சங்கர பூஜ்யபகவத்பாத ஆசாரியசுவாமிகள் வேதாந்த சித்தாந்தசாரசங்கிரகத்தில் "தன முதலியனவும் அழகிய மங்கையரு மடையும்போது சுகமென்னும் புத்தியும், சுரமுதலியன வடையும்போது துக்கமென்னும் புத்தியு மில்லாதிருப்பதே சுகதுக்க சமத்துவமாம்" என்றருளிச் செய்திருப்பதிங் குணர்தற்பாலதாம். (நல்வினையால்வரும்) சுகத்தால் மனங்கலங்காதிருத்தலும் (தீவினையால் வரும்) துக்கத்தால் மனங் கலங்குதலு

மாயின், தன்னை (ஆத்மாவை) யுள்ளபடியே * அபரோட்சமாக வறிந்து † நிரதிசயாநந்தத்தை யடைந்திருப்பவர் பின்னும் அவ்வில்லற வாழ்க்கை யின்பத்தை விரும்புவரென்று சொல்லுதல் கூடுமோ? மந்திரி! நீ இதனை யாலோசித்துச் சொல்லக்கடவாய்.

சப்தாதி விஷயங்கள் வாயிலாகவரு மின்பங்களில் ஆசையுடையவரும் அகண்டமாயுள்ள நிரதிசய வின்பத்தை யனுபவிக்குஞ் சாதனத்தைப் பெரியார் கூறக் கேட்பாராயின், அவர்கள் அச்சாதனத்தைக் கேட்ட வப்பொழுதே அவ்விஷயங்களை வெறுத்துவிட வெண்ணுகின்றனர். அவர்க்கே அங்ஙனமாயின், ‡ ஆதி

முடையவர் சுகதுக்கங்களைச் சமமாகக் காண்பதிலராவரென்றிங் குணர்தல் வேண்டும். சுகம்வந்தபோது மனம் கலங்காமையும், துக்கம் வந்தபோது மனங்கலங்குதலுமில்லாதவரே சுகதுக்கங் களைச் சமமாகக் காண்பரென்பதாம். திருக்குறள் இடுக்கணழியாமை 9-வது குறளின் விசேட வுரையில் பரிமேலழகர் "இரண்டையும் (சுகதுக்க மிரண்டையும்) ஒரு தன்மையாகக் கோடலின், பயன்களும் (மனங்கலங்காமையுங் கலங்குதலும்) இலவாயின" என்று கூறியிருத்தலு மிங்குணர்தற் பாலதாம்.

* அபரோட்சம் - பிரத்தியட்சம்.

† நிரதிசயாநந்தம் - பேதமற்ற ஆநந்தம்.

‡ ஆதிமத்தியாந்த ரஹிதம்-முதலிடை கடையில்லாதது.

மத்தியாந்த ரகிதமாயுள்ள அறிவாநந்தத்தை யடைந்த வர்கள் பின்னுமிந்த இழிவான இல்லறவாழ்க்கையை யடைய வெண்ணுவாரோ? அவர்கள் அதனையடைய வெண்ணுவார்களெனின், அவ்வா றெண்ணுகின்ற அவரை அறிவுடையார் நகைசெய்யாதொழிவரோ? மந் திரி! நீ இதனை ஆலோசனைசெய் துரைக்கக்கடவாய்.

இவனில்லற ஞானி; இவனுக்குக் காணி மனை முதலியவற்றின்கண் பற்றில்லையென்று கூறுவையாயின், அவன் அப்பொருள்களை விடாமல் அவற்றின் கண் பிரிய முடையவனா யிருப்பதேனோ? அவனவ்வா றிருப்பது † பிராரத்த கருமத்தாலென்று கூறுவையா யின், அக்கருமம் ஆசையைச் சிறிதாகவேனு முண்டாக்கியல்லவோ அப்பொருள்களை யனுபவிக்கச் செய்யும்? பரிபூரணமாயுள்ள தன்னை (ஆத்மாவை) யுணர்ந்த தத் துவஞானிகள் உலகபோகத்தில் சிறிதாகவேனு மிச்சை கொள்வாரோ; கொள்ளாரன்றோ? முடிவில்லாத (நித்தியமான) ஆநந்தத்தைச் சமாதிகூடி யனுபவித் திருத்தலே அவர்க்குரிய நிலையாம். அவர்கள் சமாதியி னின்றும் திரும்பி விழிப்பாராயின், உலகத்தைக்

† முன் சரீரங்களிற் செய்யப்பட்டு வர்த்தமான (நிகழ் கால) சரீரத்திற் கேதுவாயுள்ள கருமம் பிராரத்த கருமமாம்.

கானல்நீர்போலமித்தையாகக் கண்டு மறுபடியும்சித்தத்தை யுள்முகமாக்கிச் சமாதி செய்துவருவர்.

இக்குடும்பம் இனிமையைத் தருவதெனத் துணிந்து, காணி மனை முதலியன எம்முடையனவாமென்றுட்கொண்டு அதனால் மனஞ் சுழன்றலைகின்றவர்களும் ஒருகால விசேஷத்தில், குடும்பம் இனிமையைத் தருவதன்றென் றுணர்ந்து, காணி மனை முதலியவற்றின் கண் தாம் வைத்துள்ள அபிமானத்தை யொழித்து, அருளே வடிவாகவுடைய குருவைத் தஞ்சமாக வடைந்து, பிறவியை யொழிக்குஞ் சாதனத்தை அவர் வாயிலாகவுணர முயலுவார்களாயின், சற்குருவினருளால் பரமாநந்த வடிவினராக விளங்குகின்றவர்கள் குடும்பம் இனிமையைத் தருவதென் றெண்ணுவார்களோ; எண்ணினாலன்றோ அவர்கள் காணி மனை முதலிய விஷயங்கள் இன்பந் தருவனவாமென்று கருதி, அவற்றைப் பற்ற விரும்புவர். இவ்விஷயத்தை மந்திரி! நீ யாலோசித்துக் கூறக்கடவாய்.

ஒரு பூங்கொடியின் வேர்முழுதையும் செவ்வையாகத் தோண்டி யெடுத்துவிட்டால், அக்கொடி முற்றும் வாடிப்போவதாம்; வேர்முழுதையும் செவ்வையாகத் தோண்டியெடுத்தும் அப்பூங்கொடி பூத்துக்காய்

த்துப் பழுக்குமாயின், அஃததிசயமேயாம்; அதுபோல, ஆதிமத்தியாந்த ரகிதமாயுள்ள பிரஹ்ம சொரூபமாக விளங்கி, அதனாலகப்பற்றை யொழித்திருப்பவர் குடும்பத்தை விரும்புவதில்லையாம்; விரும்புவாராயின், அஃததிசயமேயாம். அவர்மனங்குடும்பம் இனிமையைத் தருவதென விரும்பி அதனிடத்துப் பிரவேசிப்பதே யில்லையாம்.

அஞ்ஞானாந்தகார கூபத்தில் விழுந்து முழுகி, அதனால் உடம்பினை யானென்றும் காணி மனை முதலியவற்றை யெனதென்றும்தினமுங் கருதி, அவற்றைப் பாதுகாத்தலேயே சுகமென்று துணிந்து மனங்களித்திருப்பவன், பேரின்பவடிவ மோட்சத்தைப் பெறவேண்டுமென் றிச்சைகொண்டு, துறவறத்தை மேற்கொண்டொழுகுவானாயின், அஞ்ஞானாந்தகார கூபத்தினின்றுங் கரையேறுவான். அத்துறவற மார்க்கத்திலொழுகித் தத்துவஞானத்தைச் சற்குரு வாயிலாகப் பெற்று, அந்தப் பிரஹ்ம சொரூபமாகிப் பரிபூரணானந்தமாக விளங்குவோன் விஷயவின்பத்தை விரும்புவதில்லையாம்; விஷயம் இன்பந் தருவதாமென்று கருதி, அதனைப்பெற் றனுபவிப்பானாயின், அவனிடத்துத் தத்துவஞானமே யில்லையாம்.

† சொப்பனத்தில் (கயிற்றின்கண் அரவுபோல) அறிவின்கண்தோன்றும் தனு கரண புவனபோகங்களை யாராய்ச்சி செய்து நிலைத்து நோக்கி, இவை சொப்பனப் பொருள்களாம்; பொய்யாமென் றறிபவர்களைப் போல, ‡ இவ்வுலகம் சொப்பன வுலகம் போல்வதாமென் றறிந்தவர்கள் இவ்வுலகத்தின் கண் ஆசையிலராவர். சச்சிதாநந்த வடிவமாக விளங்குகின்ற தமது நிசவடிவத்தை நிர்விகற்பசமாதி யப்பியாசத்தால் சந்தேக விபரீதமில்லா தறிந்து, எல்லாவுலகமும் § மனத்தின் விகற்பமாமென் றுணர்ந்தவர்கள் இவ்வுலகம் இன்பவடிவினதென்னும் மயக்கம்நீங்கி

† "கனவைக் கனவென் றுணர்ந்தவனைக் கனவினியா ரனவொருவன், வினவி லவனு நனவதனில் விளங்குந் தனையே யுரைப்பனதில், நனவை நினைவென் றுணர்ந்தவனை நனவினியா ரனவொருவன், வினவி லவனு மகண்டமதாய் விளங்கும் பிரம மேயென்பன்" என்று அத்துவித வுண்மை கூறுகின்றது.

‡ "காண்ப வெல்லாஞ், சொற்பனம் போலு மென்றே துணிந்தவன் ஞானி யாவான்" என்று கைவல்யநவநீதம் கூறுகின்றது. § "மனத்தினு லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும்" என்று கைவல்யநவநீதங் கூறுகின்றது.

யிருப்பார்கள். சூரியன் முன் இருளிருக்குமாயின், நல்லகண்ணுள்ள வொருவன் குழியில் வீழ்வானாயின், பேராற்றலுள்ள சூரனொருவன் போர்க்களத்தி லஞ்சுவானாயின், நெய்யும் சர்க்கரையும் சேர்த்துப் பக்குவமாகச் சமைத்துள்ள பாயசத்தை நிரம்பவுண்டவொருவன் கூழையுண்ண விரும்புவானாயின், ஞானியும் விஷயத்தி லின்பமிருக்கின்ற தென்று கருதி, அதனையடைய முயற்சி செய்வான். (சூரியன்முன் இருளிராமைபோலவும், நல்ல கண்ணுள்ளவன் குழியில் வீழாமைபோலவும், பேராற்றலுள்ள சூரன் போர்க்களத்தி லஞ்சாமை போலவும், நெய்யும் சர்க்கரையும் சேர்த்துப் பக்குவமாகச் சமைத்துள்ள பாயசத்தை நிரம்பவுண்டவன் கூழையுண்ண விரும்பாமைபோலவும், ஞானி விஷயத்தி லின்பமிருக்கின்ற தென்று கருதி அதனையடைய முயற்சி செய்வதில்லையாம். ஆனால்) சூரியன்முன் இருளிருத்தல், நல்ல கண்ணுள்ளவன் குழியில் வீழ்தல் முதலிய நான்குமிருக்குமாயின், சூரியன் முதலிய அந்நால்வர்க்கும் குறைவாம்; அதுபோல, ஞானி விஷயத்தி லின்பமிருக்கின்றதென்று கருதி அதனையடைய முயற்சி செய்வானாயின், அவனுக்குக் குறைவாம்.

பெருங்காய மிருந்த பாத்திரத்தில் அப்பெருங்காயத்தின் வாசனை யிருத்தல்போல, ஞானிகளிடத்து † லோகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனை யென்பன விருக்குமென்று கூறுதல் கூடாது; அவர்க்கவசியமான தொழில் லோகோபகாரமான காரியங்களைத் தொடங்கிச் செய்திருத்தலாம். (மணிமந்திர ஔஷதங்களுள் எதனாலாவது) * அக்கினி ஸ்தம்பனம் செய்ப வல்லவர்க்கு அக்கினி சுடுவதில்லையாம்; அதுபோல ஞானிகள்செய்யும் லோகோபகாரமானகாரியங்கள் அவ

---

† (1) எவரும் என்னை நிந்தித்தல் கூடாது; யாவருமென்னைப் புகழ்தல் வேண்டுமென்னும் திடசம்ஸ்காரம் லோகவாசனையாம்; (2) ஸ்தூலதேகத்திலுள்ள வியாதி முதலியவற்றை மருந்து முதலியவற்றாலும் சூக்குமதேகத்திலுள்ளபாவரூபமலங்களைத் தீர்த்தயாத்திரை முதலியவற்றாலும் முற்றுமொழிப்பேன்; ஸ்தூலதேகத்தின்கண்புஷ்டி அழகு முதலியவற்றையும், சூக்குமதேகத்தின்கண் புண்ணியவடிவகுணத்தையும், சம்பாதிப்பேனென்னும் திடசம்ஸ்காரம் தேகவாசனையாம். (3) சர்வசாஸ்திரங்களையும் படித்தல்வேண்டும்; அவற்றினர்த்தங்களையெல்லாமறிந்துகொள்ளுதல் வேண்டும்; அவைகூறிய நெறியில் தவறாதொழுகுதல் வேண்டுமென்னும் திடசம்ஸ்காரம்சாஸ்திரவாசனையாம். * அக்கினி ஸ்தம்பனம் - அக்கினியைச் சுடாமற் செய்தல்.

ர்க்குப் பந்தத்தைச் செய்வதில்லையாம். ஆனால் அஞ்ஞானிகள் செய்யும் காரியங்கள் பந்தத்தைச் செய்யாவென்று கூறுதற்கும், வினைவிளைவிற்குக்காரணமாயுள்ள விஷயங்களில் அவர்கட்குக் காமம் வெகுளிக ளுண்டாகாவென்று கூறுதற்கும் காரணமில்லையாம்.

§ ஞானி எக்காரியங்களைச் செய்தாலும், அவற்றாலவனுக் கிழிவில்லையாம்; (அக்காரியங்கள் லோகோபகாரமாக விருப்பனவாம்); அக்காரியங்கள் கொடியனவாமென் றுலகம் பழிக்குமாயின், அவன் ஞானியன்றாம்; மிகப் பெருந்துஷ்டனாவன். அறிவில்லாமையால் எந்தக் காரியங்களையுஞ் செய்து, அவற்றின் பயனையடையும் போது தாழ்வடைபவன் மிகக் கொடியவனே யாவன். ஞானத்திற்குத் தாழ்வுண்டாவதுண்டோ? இல்லையாம். ஒருவன் ஞானமடைந்தாலன்றோ அவன் ஞானியென்னும் பெயரைப் பெறுவன்?

இவள் † கருவயிற்றையுடையவள், அல்லது கனவயிற்றையுடையவ ளென்பது அவளுடைய அவயவங்

---

§ "சித்தநா னிறைந்தே தா னென்ற நிடமற வாகி ருந்தால், எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன" என்று கைவல்லிய நவநீதங் கூறுகின்றது.

† கருவயிறு - கருப்பங்கொண்ட வயிறு; கனவயிறு - மகோதரம்.

களைக் குறிப்பிட் டாராய்ந்து நோக்கினால் விளங்குவ தாம்; இவர் (நானார்; இப்பிறப்பெனக் கேன்வந்தது; இப்பிறப்பு எவரது உபதேசத்தால் நீங்கும் என்று) உள்ளவாறு ஞானசற்குருவைத் தேடியடைந்து, அக் குருவினுடைய அநுக்கிரகத்தால் தமது நிஜசொரூபத் தை (சிவத்தை)ச் சமாதிகூடி ‡ அபரோட்சமாகச் சந் தேக விபரீதமின்றி யறிந்தவர்; இவர் (பிறர் மதிக்கும் படி) இடம்பமாகத் தம்மை ஞானியென்று கூறுகின்றவ ரென்பது எக்காரணத்தால் விளங்குவதாம்? (நிராசை யிருந்தால் ஞானியென்றும், ஆசையிருந்தால் அஞ் ஞானியென்று மறியலாம்).

வசிட்டமாமுனிவரும் கண்ணபிரானும் முறையே இராமபிரானுக்கும் அருச்சுனனுக்கும் அவர்தம் பக் குவங்களை நோக்கி யுபதேசித்த ஞானவாசிட்டத்தின் கருத்தையும் பகவத்கீதையின் கருத்தையும் மந் திரி! நீ அறியாதிருக்கின்றாய். (மாயையும் அதன் காரியமாகிய உலகமும் ஞானவடிவ ஆத்மாவாலன் றிப் பிறிதொன்றால் பிரகாசியாமையின், அந்த ஞான வடிவ ஆத்மாவை யறிதற்குச் சாதனமாயுள்ள உபநிடத

‡ அபரோட்சமாக - பிரத்தியட்சமாக.

முதலிய) ஞானசாஸ்திரமே † பிரமாணமாம்; சரியை கிரியை முதலியவற்றைக் கூறும் சாஸ்திரம் பிரமாண மாவதன்றாம். (பொருளைத்தேடல், அதுகொண்டு போகத்தை யனுபவித்தலென்னும் உலகாசாரம் நமக்குப் பொருந்தாதெனவுணர்ந்து அவ்வாசாரத்தை யொழித்து அதற்கு) மாறாயுள்ள ஞானயோக வொழுக்கமுடையவனாயிருப்பவனே ஞானியாவன்; இல்லறவாழ்க்கையுடையவனோ (ஞானயோக வொழுக்கத்திற்கு) மாறாயவனாயிருப்பன். அமைச்சனே! நீ தைரியமுடையவனாகி இவ்விஷயம் துணிவானதென்றே செவ்வையாக மனத்திற் கொள்ளக்கடவா யென்றிவ்வாறு பலவிதமாக ஞானசாத்திரங்களினர்த்தங்களை விரித்துக்கூறி, பின் சுகாதனத்திருந்து, ஒன்றும் பேசாது கணப்போதிற்குள் மனத்தினை யொருமுகமாக்கி, (நாமரூபங்களுநள்) ஒன்றுந் தோன்றாது தான் $ வெறும்பாழா யேகமாய் விளங்குதற்குரிய நிர்விகற்ப சமாதியிலிருந்தனன்.

---

† பிரமைக்குக் காரணமா (யதார்த்த ஞானமுண்டாதற்குச் சிறந்த கருவியா) யிருப்பது பிரமாணமாம்.

$ "பார்த்த விடமெங்கும் பரிபூரணமாகிக், கோத்திருந்த பாழ்தனிலே குடியா யிருந்தனமே" என்று பிரமானுபூதி விளக்கம் கூறுகின்றது.

(மகாராஜன் பற்றின்றியிருந்து முத்தியடைந்தா னெனக் கூறல்).

இவ்வாறு இராஜயோகியாகிய மகாராஜ னிருத்தலை மந்திரி பார்த்து, இவரிவ்வாறிருப்பது அற்புதமா மென் றாச்சரிய மடைந்து, இம்மகாத்மா இவ்வாறிருத்தற் கேதுவாயுள்ள ஞானம் நமக்கின்னு முண்டாகவில்லை; ஆகலின், நாமெந்த வுணர்வைக் கொண்டு, இங்கே யிருப்போமென் றாலோசித்து, தான் வரும்போது எந்த வழியில் வந்தானோ அந்த வழியிலே திரும்பிச் சென்று (கருநாட தேசத்தின் ராஜதானி யாகிய) மாபுரத்தை யடைந்து, அங்கு மகாராஜனுக் குறவினரா யிருப்போருட னிருந்து, மகாராஜனது ஞானயோக வொழுக்கங்களை யெல்லாம் அவர்களுக்குக் கூறினான்.

அம்மந்திரி கூறியவற்றைக் கேட்ட அவ்வுறவினர்கள் அம்மகாராஜனை மிகுதியாக வியந்து பேசி, இந்த இராஜயோகி போன்றவர் கிடைப்பது மிக வருமையா மென்றுநிச்சயித்து, மகாராஜனைக்கண்டுதரிசிக்கவேண்டு மென்னும் விருப்பத்தோடு அந்த ராஜயோகி யிருக்கு மிடத்தைத் தேடி வந்தடைந்து, அந்தமாமுனியை வணங்கினார்கள்; மகாராஜனது தாயும் தந்தையும் மனை யாளும் சோகத்தோடு வந்து, அம்மாமுனியின் திருவடி களில் விழுந்து வணங்கினார்கள். இவற்றைக் கண்ட

அந்தத் தவராஜயோகி ஒரு சிறிதாகவேனுந் தனது ஞானநாட்டத்தினின்றும் மாறுபடுவதில்லாதுபுன்னகை செய்து, தன்னிடத்து வந்தவர்களுட னொருவார்த்தையுஞ்சொல்லாதிருந்தனன். வந்தவர்கள்மகாராஜனிவ்வாறிருப்பதை யறிந்து, நாமோ பந்தமுடையவரா யிருக்கின்றோம்; இவர் யாதாவது கூறினால் அதில் நமக்கேதனையுந் தெரிந்து கொள்ளுதல் முடியாதென்று நிச்சயித்து, அவ்விடத்தி னின்றுந் திரும்பித் தத்தமூர்க்குச் சென்றார்கள். இவர்கள் சென்ற பின், மகாராஜன் சிறிது நாள் நிர்விகற்ப சமாதியி லிருந்து, தனதுவாழ்நாளைக்கழித்து, விருப்பு வெறுப்பு, சுகம் துக்கம், பாவம் புண்ணியமென்றற் றொடக்கத்துத் துவந்துவஞ் சிறிது மில்லாத விதேக முத்தியை யடைந்தான்.

என்று சூதமுனிவ ரருளிச்செய்தனர். நைமிசாரண்ய முனிவர்கள் இம்மகாராஜன் கதை மிகுஅற்புதமாயிருக்கின்ற தென்றுகூறி, சூதமுனிவரை வணங்கிப் புகழ்ந்தார்கள்; பின் அம்முனிவர் அவர்களிடத்து விடை பெற்றுத் தமதாசிரமத்திற்குச் சென்றனர்.

நூற்பயன்.

"இந்தமா ராஜன் சென்ற விதிகாசந் தன்னைப்
பார்ப்போர், சிந்தனை யொன்று மின்றித் தீரவே துறவ
ராகி, அந்தமு மாதி யில்லா வமலமே வடிவ மாவர், எந்
தமை யருளி னாண்ட வெழிற்குரு பரமே வாழி."

முற்றிற்று.

## லோகோபகாரி ஆபீஸ், சென்னை.

| | | |
|---|---|---|
| விசாரசாகரம் ரூ. | 3 | 4 |
| நியாயப்பிரகாசம் | 4 | 0 |
| கைவல்யம்-உரை | 2 | 0 |
| திருவாசகம்-உரை | 2 | 0 |
| கார்தர் கலகம் | 1 | 8 |
| தாயுமானவர் பாடல் | 1 | 0 |
| பகவத்கீதை-வசனம் | 1 | 4 |
| வள்ளலார் சாஸ்திரம் | 1 | 8 |
| குடும்ப சம்ரக்ஷணி | 2 | 0 |
| பழமொழி [illegible]ராதி | 2 | 0 |
| ஞானதர்சனி | 0 | 10 |
| தத்துவதர்சனி | 0 | 10 |
| விநோதரசமஞ்சரி | 1 | 2 |
| பாகவதத்திரட்டு | 0 | 6 |
| சூதசங்கிதை-வசனம் | 1 | 0 |
| மதவிருக்ஷம் | 1 | 12 |
| ஆனந்த ராமாயணம் | 5 | 0 |
| விஷ்ணுபுராண வசனம் | 3 | 0 |
| மானிட வசியம் | 2 | 8 |
| மாநமாலை | 0 | 2 |
| பிரஹ்மானந்தலகிரி | 0 | 1 |
| கல்யாணி | 0 | 8 |
| கிருஷ்ணவேணி | 0 | 12 |
| ராமோதந்தம் | 0 | 2 |
| சித்தர் களஞ்சியம் | 1 | 8 |
| வாசுதேவ மநநம் | 1 | 0 |
| ஞானசாதகசகாயம் | 0 | 14 |
| வேதாந்த டிண்டிமம் | 0 | 4 |
| அற்புதராமாயணம் | 0 | 10 |
| பகவத் கீதை உரை | 2 | 0 |
| இந்து பைபில் | 1 | 12 |
| விருத்திப் பிரபாகரம் | 4 | 0 |
| தத்துவாநுசந்தானம் | 2 | 8 |
| கைவல்யம்-வசனம் | 0 | 8 |
| சாஸ்திரவிசித்திரம் | 0 | 12 |
| திவ்ய தேசயாத்திரை | 2 | 0 |
| பட்டணத்தார் பாடல் | 1 | 0 |
| யோக உபந்நியாசங்கள் | 0 | 12 |
| மநோவசிய தத்துவம் | 2 | 0 |
| கலியுக விநோதக்கதை | 0 | 8 |
| பிரபுலிங்கலீலை உரை | 2 | 8 |
| பிரபுலிங்கலீலை வசனம் | 0 | 12 |
| வேதாந்தமநநசிந்தாமணி | 4 | 0 |
| பரமார்த்தநியாயத்தீர்ப்பு | 0 | 12 |
| சௌனத்திபுராணம்-உரை-24-ஜதிக வடங்களுடன் ரூ. | 2 | 8 |
| மண்டலப் பிராஹ்மணோபநிஷத்-இராஜயோக பாஷ்யம் | 0 | 4 |
| குசேல[illegible]யானம் பதவுரை - பொழிப்புரை 28 படம் | 3 | 0 |
| சூட்சும வைத்தொழில் சாஸ்திரம்—174-வித்தைகள் | 0 | 10 |
| ஐரோப்பா யுத்தம் 100 படம் 40 அத்தியாயம், 400 பக்கம் | 1 | 8 |

| | | |
|---|---|---|
| விவேக சிந்தாமணி உரையுடன் 2-பாகமும் | 0 | 12 |
| தனிப்பாடற்றிரட்டு உரை-ஒவ்வொரு பாகமும் | 1 | 8 |
| பதினெண்சித்தர் ஞானக்கோவை 8-பாகம் | 1 | 4 |
| இதாசாரத் தாலாட்டு-உரையுடன் | 0 | 4 |
| வேதாந்த வியவகார கிரிமினல கேஸ் | 1 | 8 |
| தேவலோகக் கிரிமினல் கேஸ் | 1 | 8 |
| சங்கரத் துவேஷியாரின் வாய்ப்பூட்டு | 0 | 6 |
| ஆத்திசூடி பாஷியார்த்தமும் ஆந்தரார்த்தமும் | 0 | 8 |
| தாயுமானவர் பாடல் உரையுடன் | 3 | 4 |
| பிரபோத சந்திரோதய வசனம் | 1 | 0 |
| வேதப்பொருள் விளக்கம் | 0 | 12 |
| கைவல்யமூலம் - பாகெட் அளவு | 0 | 3 |
| அம்பிகாபதியும்—அரசிளங்குமரியும் | 0 | 12 |
| வேதாந்த சூளாமணி - மூலம் பாக்கெட் அளவு | 0 | 2½ |
| சதகத்திரட்டு முதல் பாகம் | 0 | 9 |
| டிஷ 2-பாகம் | 1 | 0 |
| அகபுற ஆராய்ச்சி விளக்கம் | 1 | 4 |
| குமாரதேவர் 16 சாஸ்திரம் | 0 | 10 |

| | | |
|---|---|---|
| விவேகானந்தர் பக்தி யோகம் | 0 | 8 |
| விவேகானந்த விஜயம் | 1 | 4 |
| விவேகானந்தர்கடிதங்கள் | 0 | 4 |
| ,, கர்மயோகம் | 0 | 8 |
| பர்சனல்மாக்னெடிசம் | 2 | 0 |
| உலகவிசித்திரக் கதை | 1 | 0 |
| சிவலோகக்கிரிமினல்கேஸ் | | 8 |
| மெஸ்மரிச பாடங்கள் | 2 | 0 |
| அரிச்சந்திரபுராணவசனம் | 1 | 8 |
| ஞானவாசிட்டம்-உரை | 3 | 8 |
| ஞானவாசிட்ட வசனம் | 1 | 8 |
| அருணாசலபுராணவசனம் | 1 | 0 |
| ஔவை குறள்-உரை | 0 | 8 |
| பொற்றொடி | 0 | 13 |
| சுவாசமே உயிர் | 1 | 0 |
| [illegible]யஅஷ்டாங்கதீபிகை | 0 | 4 |
| முத்திசோபானம் | 0 | 8 |
| விஜயகாருண்யம் | 0 | 12 |

## நாநாஜீவவாதக் கட்டளை.

(குறிப்புரையுடன்). திருத்தமான மூன்றாவது பதிப்பு.

ஆரம்பத்தில் வேதாந்தம் படிப்பவர்களுக்கு இப்புஸ்தகம் பெரிதும் உபயோகமாயுள்ளது; உபாத்தியாயர் சகாயமில்லாவிடினும் இதனால் வேதாந்தத்தின் பிரக்கிரியைகளெல்லாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகம் படிப்பவர்கள் வேறு எந்த வேதாந்த புத்தகங்களையும் படிப்பதற்கு அதிகாரிகளாவர்; இது விரிவாக எழுதப்பட்ட குறிப்புரையுடன் கூடியது 0-5-0

## பாட்டியற் கொத்து (உரையுடன்).

இதில் வச்சணந்திமாலை. சிதம்பரப்பாட்டியலின்பொருத்தவியல் மரபியல், நவநீதப்பாட்டியல், சம்பந்தப்பாட்டியல் அடங்கியிருக்கின்றன. இது நூலின் முன்மொழி இலக்கணமும் பிரபந்த இலக்கணமும ஆராய்வார்க்குப் பெருங் கருவியாயிருப்பதாம். விலை அணு 6.

## பஞ்சதசப்பிரகரணம் - மூலம்.

இது சம்ஸ்கிருதத்தில் ஸ்ரீ சங்கரபீடத் தாசிரியரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீபாரதீ தீர்த்த வித்யாரண்யசுவாமிகளவர்களால் அருளிச் செய்யப்பட்டது; தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயன்படற் குபயோகமாமாறு கோவிலூர் மடாலயம் ஸ்ரீநித்யானந்த சுவாமிகளவர்களாலும், ஸ்ரீ சுப்பையசுவாமிகளவர்களாலும் செய்யுள் வடிவமாகச் செய்யப்பட்டுள்ளது. 288 பக்கங்கொண்ட பாக்கெட்சைஸிலிருப்பது. 0—10—0

## வேதாந்தசாராமிருதமும் அத்துவித ரசமஞ்சரி மூலமும் உரையும். விலை அணா ஆறு.

இதில் இரண்டு புத்தகங்க ளடங்கி யுள்ளன. ஒன்று ஸ்ரீ சதாநந்த பரிவிராஜகாச்சாரியர் சம்ஸ்கிருதத்தில் திருவாய் மலர்ந்தருளிய வேதாந்த சாராமிர்தமும், மறமுன்று ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர் ஸம்ஸ்கிருதத்தில் திருவாய்மலர்ந்தருளிய அத்துவிதரச மஞ்சரியுமாம்.

### 1. வேதாந்த சாராமிர்தம்.

இது வேதாந்தங் கற்கவிரும்புவோர்கட்கு ஒருதிறவுகோல் போலவதாம். இதில் சாதனைப் பிரகாணம், அதிதியாரோபப் பிரகரணம், மகாவாக்கியப் பிரகாணம், சிரவணதிப் பிரகரணம், ஜீவன்முத்திப்பிரகரணம் என்னும் 7 பிரகரணங்கள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் வசன நடையில் எழுதப்பட்டுள்ளன.

### 2. அத்துவித ரசமஞ்சரி.

இதில் சதாசிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரமும், அவரருளிச் செய்த சுலோகம் கிரந்தத்திலும், ஸ்ரீ கோவிலூர் - மடாலயம் - ஸ்ரீ முத்து ராமலிங்க ஞான தேசிகர் பாத சேவாமணி ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் மூலமும் - உரையும் அடங்கி இருக்கின்றன.

---

இதுகாறும் வெளிவராத

## பூகிமுனிவர் வாதவைத்திய நூல்கள்.

வாதாங்க தீக்ஷை விதி—800, வாதவைத்திய விளக்கம் மதிவெண்பா-100. இம்மூன்றுஞ் சேர்ந்தது ரூபாய் ஒன்று.

தேரையர் கரிசலை, பூகிமுனி கரிசலை, கல்கண்டு குத்திரம் இம்மூன்றுஞ் சேர்ந்தது. அணு பன்னிரண்டு.

## க்தமாலா வசனம்.

இதில் 192 பக்தர்களின் சரிதிரங்களடங்கி யிருக்கின்றன. இது ஸ்ரீ மகிபதிபாவா எனனும் பக்த சிரேஷ்டா மகாராஷ்டிர பாஷையி லியற்றிய வடதேசத்துப் பக்த சரித்திரங்களடங்கிய பக்தவிஜயம், சந்தவிஜயம், சந்தலீலாமிருதமென்னும் கிரந்தங்களுக்கிணங்கத் தமிழ்ப்பாஷையில் ஸ்ரீ சாது வேணுகோபாலகிருஷ்ண முதலியா ரவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருத்தமான இரண்டாவதுபதிபபு. ரூ. 3-8-0. இப்போது இதன் விலை ரூ 2 - 8 – 0க்குக் குறைக்கப்பட்டிருக்கின்றது. கொஞ்ச காப்பிகளே யிருக்கின்றன.

---

## வாக்கியசுதை யென்னுந் திருக்குத் திருசிய விவேகம். மூலமும் உரையும்.

இஃது அநேக வேதாந்த சாஸ்திரங்களின் ஆசிரியரும், சங்கராபீடத்தாசிரியரா யெழுந்தருளி யிருந்தவருமாய ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகளா லருளிச்செய்யப்பட்டது. இதில் சோபான பஞ்சகம், மனிடா பஞ்சகம், சதகம, விவேக சட்கம் என்னுமிவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணு 2.

---

## வேதாந்தசாரம்.

இது யாவர்க்கும் விளங்கக்கூடிய எளிய செந்தமிழ் நடையில் வினவிடை ரூபமாயுள்ளது; வேதாந்தசாஸ்திர முக்கியமான இரகசியங்களை யெல்லாம் எளிதிலறிந்து கொள்வதற்குத் தீபம்போல்வதாம். விலை அணு 10.

## வேதாந்த சாஸ்திர ரத்நாவளி.

இதில் நாநாஜீவ வாதக்கட்டளை, சிசாசாரத் தாலாட்டு, சிவஞானபோதம், மஹாராஜா துறவு, வைராக்ய சதகம், வைராக்யதீபம், இலக்ஷணாவிர்த்தி, வேதாந்த சூளாமணி, கைவல்ய நவநீதம் ஆக ஒன்பது புத்தகங்களடங்கி யிருக்கின்றன. இது ராயல் 32 பேஜ்ஜில் 50 பவுண்டு கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. பாக்கெட் அளவு-ரூபாய் ஒன்று.

---

ஸ்வாமி விவேகாநந்தர்

## இராஜயோகம்.

(இதுகாறும் தமிழில் வெளிவராதது.)

இதில் ஸ்வாமி விவேகாநந்தர் 1893வது வருஷத்தில் அமெரிக்காவில்செய்த 8-உபந்யாசங்களடங்கியிருக்கின்றன. குருமுகமாக அறியவேண்டிய பலவிஷயங்கள் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன; இராஜயோக மார்க்கத்தையநுஷ்டிப்பவர்க்கு இது மிகு உபயோகமானது. அணா 12.

☞ இந்த ஆபீஸில் வேறு சாஸ்திரங்களும், நாவல்களும் கிடைக்கும்.

லோகோபகாரி ஆபீஸ்,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

உ. வே. சாமிநாதையர்.